வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 12.04.2024 வெள்ளிக்கிழமை இதழ் : 103 பக்கங்கள் : 12

# பெரமுனவின் வேட்பாளராக இன்னமும் ரணில் உள்ளார்!

## மகாநாயக்க தேரரிடம் ஆசி பெற்ற பின்னர் நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு



**கண்டி, ஏப்ரல் 12**

**ஜனாதிபதித் தேர்தலில் சிறீ லங்கா பொதுஜன பெரமுன நிச்சயம் ஒரு வேட்பாளரை களமிறக்கும். அவர் ரணில் விக்கிரமசிங்கவாகவும் இருக்கலாம் - இவ்வாறு மல்வத்து மகாநாயக்க தேரரை சந்தித்த பின்னர் அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

நாங்கள் ஒரு திட்டத்தோடு அரசியல் செய்பவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியைப் பொறுப்பேற்ற பின்னர் மகாநாயக்க தேரர்களிடம் ஆசி பெற்ற பின்னர் செய்தியாளர்களை சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் எனது பெயரும் பேசப்படுகிறது. இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும். அதில், மொட்டு சின்னம் நிச்சயம் இருக்கும்.

நாங்கள் ஒரு திட்டத்தோடு அரசியல் செய்பவர்கள். வந்தது - போனது என்று முடிவெடுப்பதில்லை. நாட்டின் எதிர்காலம் குறித்தும், கட்சியின் கொள்கைகள் குறித்தும் சிந்தித்த பிறகே

11

# 4 வயதில் முன்பள்ளி கட்டாயம்!

கொழும்பு, ஏப். 12

4 வயது சிறுவர்களுக்கு முன்பள்ளி கட்டாயமாக்கப்படும் என்று கல்வி மறுசீரமைப்பு தொடர்பான நிபுணர் குழுவின் பேராசிரியர் குணபால நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இதன்படி, 2026ஆம் ஆண்டு முதல் பாடசா

11

# தடையின்றி எரிபொருள் விநியோகம்

கொழும்பு, ஏப். 12

தமிழ் - சிங்கள புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது சிபெட்கோ எரிபொருள் நிலையங்களால் தொடர்ந்தும் எரிபொருள் விநியோகம் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள்

11

# புலிகளின் தலைவராலேயே என்னை துரத்த முடியவில்லை

## ஈ. பி. டி. பி. டக்ளஸ் சொல்கிறார்



யாழ்ப்பாணம், ஏப். 12

"புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனாலேயே என்னைத் துரத்த முடியவில்லை என்ற நிலை இருக்கும் போது சில குடிகாரர்களால் என்னை எவ்வாறு துரத்த முடியும்?", இப்படி கூறியிருக்கிறார் ஈ. பி. டி. பியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான கே. என். டக்ளஸ் தேவானந்தா.

பூநகரி - பொன்னாவெளியில் சுண்ணக்கல்

11

# இலங்கை பொருளாதாரம் 2024இல் மிதமான வளர்ச்சி

கொழும்பு, ஏப். 12

இலங்கையின் பொருளாதாரம் இந்த ஆண்டில் மிதமான வளர்ச்சியை எட்டும் என ஆசிய அபிவிருத்தி வங்கியின் முன்னணி பொருளாதார வெளியீடு ஒன்றின் அடிப்படையில் கணிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதாரம் இரண்டு வருடங்கள் தொடர்ச்சியான வீழ்ச்சியின் பின்னர் இந்த நிலையைக் காட்டுவதாக அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு இந்நாட்டின் பொருளாதாரம் 1.9 சதவீத வளர்ச்சியைக் காட்டியுள்ளதாகவும் குறிப்பிடப் பட் டுள்ளது.

2025 ஆம் ஆண்டில் இலங்கையின்

11

# தொழில்நுட்பத்துக்கு முன்னுரிமை படையினரை குறைப்பதற்கு முடிவு

கொழும்பு, ஏப். 12

தொழில்நுட்பத்துக்கு முன்னுரிமை கொடுத்து விமானப் படையினரின் எண்ணிக்கையை 35 ஆயிரத்திலிருந்து 18 ஆயிரமாகக் குறைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விமானப் படை தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

"இன்று ஒரு கைபேசி ஒரு இலட்சம் ரூபாய் என்றால் 6 மாதத்தின் பின்னால் அதன் பெறுமதி 50 ஆயிரம் ரூபாயாக வீழ்ச்சியடைகின்றது. இதேபோன்றே இந்த தொழில்நுட்பமும் முன்னோக்கி செல்லும்போது செலவைக் குறைக்கும்.

நாம் அனைவரும் வாங்கக்கூடிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டும். சி. சி. ரீ. வி. என்பது புதிய விஷயம் அல்ல. செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பமும் புதியதல்ல.

தற்போதுள்ள தொழில்நுட்பத்தை பயன்படுத்தி படையினரின் எண்ணிக்கையை குறைக்கலாம். உதாரணமாக, எங்கள் விமானப் படை தளங்களில் ஒன்று அநேகமாக பல கிலோ மீற்றர்கள். 10 கிலோ மீற்றர் என்றால், எத்தனை துருப்புகளை நிறுத்த வேண்டும்?

11

# 3 மற்றும் 5 வயது சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்த தந்தை!

## - திருமலையில் கொடூரம் -

திருகோணமலை, ஏப். 12

தனது பிள்ளைகளான 3 வயது சிறுமியையும் 5 வயது சிறுவனையும் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கிய குற்றச்சாட்டில் 28 வயது நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட சிறுவர்கள் இருவரும் தங்கள் தந்தையே பாலியல் ரீதியாக துன்புறுத்தலுக்கு உள்ளாக்கினார் என்று பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை - தம்பலகாமம் பகுதியிலேயே இந்தக் கொடூர சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது குறித்து மேலும் அறியவருவதாவது,

கைதான நபரின் மனைவி வெளிநாட்டில் உள்ளார். இரு பிள்ளைகளும் தந்தையின் கண்காணிப்பிலேயே இருந்துள்ளனர். இந்த நிலையில், 5 வயதான சிறுவன் துஷ்பிரயோகத்துக்கு உள்ளான நிலையில் மருத்துவமனையில்

11

## லண்டன், பாரிஸில் வாழும்

# புலம்பெயர் சமூகத்தினரை சந்திக்கிறது நல்லிணக்க பொறிமுறை செயலக குழு


கொழும்பு, ஏப். 12

லண்டன் மற்றும் பாரிஸ் நகரங்களைத் தளமாகக் கொண்டு இயங்கி வரும் மூவினங்களைச் சேர்ந்த புலம்பெயர் தமிழர்களை எதிர்வரும் வாரம் சந்திக்கவுள்ள உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான இடைக்கால செயலகத்தின் கொள்கைப்பிரிவு தலைவர் யுவி தங்கராஜா, இதுவரை இலங்கையில் இயங்கிய ஆணைக்குழுக்களில் முதன்முறையாக புலம்பெயர் தமிழர்களையும் உள்வாங்கும் நோக்கிலேயே இச்சந்திப்புக்களை நடத்தவிருப்பதாகத் தெரிவித்தார்.

நாட்டில் உண்மை, ஒற்றுமை மற்றும்

11

# இந்திய தேர்தல் களத்தில் மீண்டும் முக்கிய பேசுபொருளாக கச்சதீவு



ராஜஸ்தான், ஏப். 12

கச்சதீவில் யார் வசிக்கிறார்கள் என கேள்வி கேட்கும் காங்கிரஸ், ராஜஸ்தானின் பாலைவனத்தில் யாரும் வசிக்காததால் அதனையும் கொடுத்துவிட துணியுமா? என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கேள்வியெழுப்பியுள்ளார்.

ராஜஸ்தானின் கரோலி நகரில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கச்சதீவில் யாராவது வசிக்கிறார்களா? என்று காங்கிரஸ் மூத்த தலைவர் திக்விஜய் சிங் கேள்வியெழுப் பியிருந்தார். இதற்கு பதிலளிக்கும் வகையில் இந்தியப் பிரதமர் உரையாற்றினார்.

கச்சதீவில்

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது

இந்தச் சம்பவம் பற்றி முன்னரும் ஒரு தடவை எழுதியதாக ஞாபகம். ரணசிங்க பிரேமதாஸ ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் யாரை பிரதமராக நியமிப்பார் என்பதில் பல ஊகங்கள் நிலவின.

அப்போது கட்சியில் இரண்டாம் நிலை தலைவர்களாக பலர் இருந்தார்கள். அவர்களில் முக்கியமானவர்கள் லலித் அத்துலத் முதலியும் காமினி திஸநாயக்கவும் தான்.

ஜனாதிபதி பிரேமதாஸ அதிகாலை நான்கு மணிக்கே எழுந்து தனது அன்றாட கடமைகளை தொடங்கிவிடு வார் என்று அப்போது கூறப்படுவதுண்டு.

ஒருநாள் அதிகாலை நான்கு மணிக்கு அவரிடமிருந்து லலித் அத்துலத்முதலிக்கு தொலைபேசியில் உடன் வீட் டுக்கு வருமாறு அழைப்பு வந்ததாம். அவர் மகிழ்ச்சியடைந்தவாறு, தன்னை பிரதமராக நியமிப்பதற்காகத் தான் வீட்டுக்கு கூப்பிடுகிறார் என்ற நம்பிக்கையில் விழுந்தடித்துக் கொண்டு கொழும்பு மத்தியில் வாழைத்தோட்டத்தில் இருந்த பிரேமதாஸவின் தனிப்பட்ட இல்லத்துக்கு சென்றிருக்கிறார்.

ஆனால், அவர் அங்கு சென்று அவரது வீட்டு வர வேற்பு அறைக்கு போய்ச் சேர்ந்தபோது, ஏற்கனவே காமினி திஸநாயக்க அங்கு வந்து அமர்ந்திருந்திருக்கிறார்.

காமினியைக் கண்டதும் லலித்துக்கு பலவாறு எண்ண ஓட்டங்கள் ஓடத் தொடங்கின. தன்னை நியமிக்கின்ற போது காமினி கோபமடையலாம் என்பதால் அவரை சமாதானப் படுத்த அழைத்திருக்க லாம் என்பது லலித்தின் நினைப்பு. ஆனால், காமினியும் அவ்வாறு தான் தனக்குள் நினைத்திருக்கிறார். இருவரும் ஒருவரோடு ஒருவர் எதைப் பேசுவது என்பது தெரியாமல் பிரேமதாஸவின் அழைப்புக்காகக் காத்திருந்திருக்கின்றனர்.

சில நிமிடங்களில் டிங்கிரி பண்டா விஜயதுங்க அங்கே வந்து சேர்ந்திருக்கிறார். கட்சியின் மூத்த உறுப்பினர் என்றாலும் அவர் மூன்றாம் நான் காம் மட்ட தலைவர். பிரதமர் பதவிக்கு யாரும் அவரை நியமிப்பார் என்று கனவிலும் நினைக்கமாட்டார்கள் என்பதால், இப்போது அவர் வேறு ஏதோ விடயமாகத்தான் அழைத்திருக்கிறார் என்று மூவரும் நினைத்துக்கொண்டனராம்.

மூவரையும் உள்ளே அழைத்த பிரேமதாஸ, முத லில் லலித்திடம் ஒரு கேள்வி கேட்டிருக்கிறார். இரண்டும் இரண்டும் எத்தனை என்பது தான் கேள்வி. பிரிட்டனின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழக பட்டதாரியான லலித், எதுவித தயக்கமும் இன்றி, நான்கு என்றிருக்கிறார்.

அடுத்து அதேகேள்வி, காமினியிடம், அவர் சற்று சுதாகரித்துக்கொண்டு, இரண்டும் இரண்டும் நான்குதான் சேர், ஆனால் இரண்டையும் இரண்டையும் அருகருகே வைத்தால் இருபத்தியிரண்டு என்றிருக்கிறார்.

இப்போது டி. பி. விஜயதுங்கவிடம் அதேகேள்வி, இரண்டும் இரண்டும் நான்குதான் சேர். ஆனால், நீங்கள் மூன்று என்றால் மூன்றுதான் என்றார்.

உடனே எழுந்து அவரது கைகளைக் குலுக்கிய பிரேமதாஸ "நீர்தான் எனது பிரதமர்" என்றாராம்.

இது ஓர் ஆங்கிலப் பத்திரிகையில் டி. பி. விஜயதுங்க பிரதமராக நியமிக்கப்பட்ட பின்னர் ஒரு பத்தி எழுத்தாளர் நகைச்சுவையாக எழுதிய கதை. அதே விஜயதுங்க, பின்னாளில் பிரேமதாஸ புலிகளால் படுகொலை செய்யப்பட ஜனாதிபதியாகவும் ஆகினார் என்பது பழைய சங்கதி.

இப்போது இந்தக் கதையை எதற்காக எழுதுகின்றேன் என்று நீங்கள் நினைக்கலாம். அந்தச் செய்தியைப் படித்தபோது எனக்கு இந்தக் கதைதான் ஞாபகத் துக்கு வந்தது.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை முன்நிறுத்த வேண்டும் என்ற கருத்து தமிழ் மக்கள் மத்தியில் பரவலாக முன்வைக்கப்பட்டு வரும் இவ்வேளையில் அவ்வாறு செய்வது ராஜபக்ஷக்களை மீட்சிபெற்று விடச் செய்துவிடும் என்றும் இதற்கான முயற்சியே இது என்றும் ம. ஆ. சுமந்திரன் கருத்து வெளியிட்ட மறுதினமே நமது வடக்கு மாகாண அவைத் தலைவரும் தனது தனிப்பட்ட கருத்து என்று ஒரு கருத்தை தெரிவித்திருக்கிறார்.

முதலில் அவர் என்ன சொன்னார் என்று பார்ப்போம்:

"என்னைப் பொறுத்தவரையில் இது எவ்வாறாயினும் நடைமுறை சாத்தியமாகாது. பொது வேட்பாளரை தேடிப் பிடிப்பதற்குள்ளேயே முரண்பாடுகள் பல வந்து சேரும். ஏற்கனவே நிலைமை அப்படித்தான் இருக்கிறது. ஆகவே, என்னுடைய கருத்து என்னவெனில் பேரம்பேச வேண்டிய சூழ்நிலைக்கு ஒற்றுமையாக பலமாக நாங்கள் இருக்க வேண்டும். அந்தப் பலத்தோடு நாங்கள் பேரம் பேசலாம். ஆனால், ஒரு பொது வேட்பாளர் என்றால் ஏனைய வேட்பாளர்களோடு நாங்கள் சமநிலையில் நிற்கின்ற போது சில சமயங்களில் எங்களின் பேரம் பேசும் பலம் குறைவாக இருக்கலாம். அல்லது அவர்கள் எங்களோடு பேரம் பேசாமலும் போகலாம். இவ்வாறான சூழல்களும் இருப்பதால் பொது வேட்பாளரை தெரிவு செய்வதிலேயே இந்த விடயம் முடங்கி விடும் அல்லது சாத்தியமற்றதாக அமையும். அது பிரதேச வாதங்களுக்கு இடங்கொடுக்கக் கூடிய வாய்ப்பாகவும் அமையும்".

இதுதான் சிவஞானம் ஐயா கூறியது. அவர் அவராகத்தான் பேசுகிறாரா என்ற சந்தேகம் எழுவதை தவிர்க்க முடியவில்லை. பேரம்பேச வேண்டிய சூழ்நிலைக்கு ஒற்றுமையாக பலமாக நாங்கள் இருக்க வேண்டுமாம். அந்தப் பலத்தை எப்படி நாம் வெளிக் காட்டுவது என்பதையும் அவர் சொல்லியிருக்கலாம். அதைவிட அவர் சொல்கிறார், நாம் நமது பொதுவேட்பாளரை நியமிக்கின்றபோது நாங்கள் சமநிலையில் அதாவது மற்றைய வேட்பாளர்களுடன் சமநிலையில் நிற்கின்றபோது பேசும் பலம் குறைந்து விடுமாம்.

அவர் என்ன சொல்ல வருகிறார் என்பது அவருக்குத்தான் புரிந்தது. நாம் மற்றையை வேட்பாளர்கள்போல பல மில்லியன் வாக்குகளோடு சமமாக இருப்போம் என்கிறாரோ?, நமது பொதுவேட்பாளர் ஏழு லட்சம் வாக்குகள் பெற்றாலே அது மிகப்பெரிய வெற்றியாக பார்க்கப்படவிருக்கும் நிலையில், ஐயா- மற்றைய வேட்பாளர்களுடன் நமது வேட்பாளர் சமநிலையில் நிற்பாராம்.

எனக்கு என்னவோ, இரண்டும் இரண்டும் எத்தனை என்று பிரேமதாஸ கேட்டபோது டிங்கிரி பண்டா விஜயதுங்க கூறியதுதான் ஞாபகத்துக்கு வருகின்றது.

**- ஊர்க்குருவி.**





படங்கள் - ஐ. சிவசாந்தன்

# சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய மஞ்சத் திருவிழா சிறப்புற நடந்தது

யாழ்ப்பாணம், ஏப். 12

வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவ பெருந்திருவிழாவில் திருமஞ்ச திருவிழா நேற்று முன்தினம் புதன் கிழமை பக்திபூர்வமாக இடம் பெற்றது.

ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளை தொடர்ந்து, வசந்தமண்டப பூசை நடைபெற்று விநாயகப் பெருமான் உள்வீதி எழுந்தருளினார்.

அதனைத் தொடர்ந்து வர்ண விளக்குகளால் அலங்கரிக்கப் பட்ட திருமஞ்சத்தில் விநாயகப் பெருமான் வெளிவீதி வலம் வந்து அடியவர்களுக்கு அருள் பாலித்தார்.

திருமஞ்ச உற்சவத்தில் ஈழத்தின் புகழ்பூத்த நாதஸ்வர, தவில் கலைஞர்களின் விசேட கச்சேரியும் நடைபெற்றது.

(ஐ)

# பிணைமுறி மோசடியாளர்களை கட்சியில் உள்வாங்கவில்லை!

## ஐக்கிய மக்கள் சக்தியின் சஜித்

கொழும்பு, ஏப். 12

ஐக்கிய மக்கள் சக்தி என்பது மத்திய வங்கி பிணைமுறி மோசடியுடன் தொடர்புபட்டவர்களை உள்வாங்காமல் உருவாக் கப்பட்ட கட்சி என சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பிணைமுறி மோசடியில் ஈடுபட்டவர்களை கட்சி தவிர்த்துக்கொண்டது அவர்களை உள்வாங்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



மத்திய வங்கி பிணைமுறி மோசடி சூத்திரதாரிகளை வெளியேற்றிய பின்னரே எங்கள் கட்சி தனது பயணத்தை ஆரம்பித்தது. எங்கள் கட்சியின் பயணம் ஜனாதிபதி பதவிக்கானதோ அல்லது பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கானதோ இல்லை இலங்கை மக்களுக்கானது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சமீபத்தைய குற்றச்சாட்டுகளுக்குப் பதில் அளிக்கும் விதத்திலேயே சஜித் பிரேமதாஸ மேற்கண்ட விடயங்களை தெரிவித்தார். (ஐ)

# மியன்மாரில் கடத்தப்பட்ட 8 இலங்கையர்கள் மீட்பு!

கொழும்பு, ஏப். 12

கடத்தப்பட்டு மியன்மாரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 8 இலங்கையர்கள் மீட்கப்பட்டு தாய்லாந்தில் உள்ள இலங்கை தூதரகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கடத்தப்பட்டு மியன்மாரில் உள்ள சட்டவிரோத சைபர் க்ரைம் அடிமைகள் முகாமில் பிடித்து வைக்கப்பட்டிருந்த 56 இலங்கையர்களில் 8 பேரே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளனர். மீட்கப்பட்டவர்களில் 6 ஆண்களும் இரண்டு பெண்களும் உள்ளனர்.

இது குறித்து மியன்மாருக்கான இலங்கைத் தூதுவர் ஜானக பண்டார இது தொடர்பில் தெரிவிக்கையில்,

கடத்தப்பட்டடு மியன்மாரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 56 இலங்கையர்களில் 8 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர். மீட்கப்பட்ட 8 பேரையும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மீட்கப்பட்ட இலங்கையர்களைப் பாதுகாப்பாக நாட்டுக்கு அனுப்ப இலங்கை தூதரகம், வெளியுறவுத் துறை அமைச்சகம் மற்றும் ஏனைய அதிகாரிகள் இணைந்து பணியாற்றியுள்ளனர்.

மனித கடத்தலினால் பாதிக்கப்பட்டு மியன்மாரில் சிக்கியுள்ள ஏனைய இலங்கையர்களை நாட்டுக்கு மீண்டும் அனுப்ப மியன்மாரிலுள்ள இலங்கைத் தூதரகமும் வெளிவிவகார அமைச்சும் இணைந்து செயல்பட்டு வருகின்றன.

இலங்கையர்கள் அடங்கிய குழுவினர் கடந்த ஆண்டு டிசெம்பரில் வேலைவாய்ப்புக்காக தாய்லாந்திற்கு அழைத்து வரப் பட்டுள்ள நிலையில் மியன்மாரின் பயங்கரவாத குழுவால் கடத்தப்பட்டு சட்டவிரோத சைபர் அடிமைகள் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த பயங்கரவாதக் குழு, கடத்தப்பட்ட இலங்கையர்களை விடுவிக்க 8 ஆயிரம் அமெரிக்க டொலர்களை - நம் நாட்டு மதிப்பில் சுமார் 24 இலட்சம் ரூபாயை கப்பமாக கோரியிருந்த நிலையில் இலங்கைத் தூதரகத்தின் உதவியுடன் கடந்த ஆண்டு அவர்களில் சுமார் 32 இலங்கையர்கள் மீட்கப்பட்டனர்.

எஞ்சிய 56 இலங்கையர்களை மீட்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் தற்போது சுமார் 8 இலங்கையர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

(ஐ)

ஈழநாடு
Eelanadu
12.04.2024 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், பங்குனி 30

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# மக்களை நம்பினால்

தமிழ் பொது வேட்பாளர் விடயத்தை எதிர்த்துப் பேசுபவர்கள் முன்வைக்கும் வாதம், இது சிங்கள இனவாதிகளை உசுப்பேற்றும் விடயம். இதனால் அவர்கள் மீளவும் எழுச்சியடைவார்கள். இலங்கை சுதந்திரமடைந்ததாகக் கூறப்படும் காலத்துக்கு முன்னரே தமிழர் பிரச்னை பேசப்பட்டது. இதனடிப்படையில்தான் ஜீ. ஜீ. பொன்னம்பலம் ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையை முன்வைத்தார். ஆனால், அது தமிழ்த் தேசிய அடிப்படையிலான கோரிக்கையல்ல. பின்னர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் தவறான அரசியல் பாதையில் செல்கின்றார், தமிழ் மக்களுக்கு துரோகமிழைக்கின்றார் - என்று கூறியே எஸ். ஜே. வி. செல்வநாயகம் இலங்கை தமிழ் அரசுக் கட்சியை உருவாக்கினார்.

அதுவரையில் ஜீ. ஜீ. பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சிக்கு பின்னால் அணிவகுத்திருந்த தமிழ் மக்கள் செல்வநாயகத்தின் பக்கமாக அணிதிரண்டனர். செல்வநாயகத்தைத் தங்களின் பெருந் தலைவராக வரித்துக் கொண்டனர். பின்னர், துரோகமிழைத்தாரெனக் கூறப்பட்ட ஜீ. ஜீ. பொன்னம்பலத்தையும் இணைத்துக் கொண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி உருவானது. தமிழ் மக்கள் பிரிந்து சென்று தனியரசை அமைப்பது ஒன்றுதான் ஒரேயொரு வழியாகும் என்னுமடிப்படையில் 1976இல் வட்டுக்கோட்டை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனடிப்படையில் நடைபெற்ற 1977 பொதுத் தேர்தலின்போது, மக்கள் கூட்டணியின் பின்னால் எழுச்சிகொண்டு அணிதிரண்டனர்.

பின்னர், 2004 பொதுத் தேர்தலின் போது விடுதலைப் புலிகளின் ஆதரவில் இயங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பின்னால் நமது மக்கள் அணிதிரண்டனர். 2010இற்கு பின்னரான அரசியல் சூழலில் இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பின்னால் அணிதிரண்டனர். இவ்வாறு ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் தமிழ் மக்கள் கொள்கை நிலைப்பாட்டின் பின்னால் மட்டுமே அணிதிரண்டிருக்கின்றனர். மக்கள் எந்த வொரு சந்தர்ப்பத்திலும் தங்களை பிளவுபடுத்திக் கொள்ளவில்லை. ஆனால், தமிழ்த் தேசியத்தை பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக்கொண்ட கட்சிகளே மக்களை பிளவுபடுத்தின - பிளவுபடுத்திக் கொண்டிருக்கின்றன.

2010இல், ஆசனப் பங்கீட்டை முன்வைத்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி கூட்டமைப்பிலிருந்து வெளியேறியது. வயதில் மூத்தவரான இரா. சம்பந்தன் கதிரைப் போட்டியை விடுத்து பக்குவமாக இந்த விடயத்தைக் கையாண்டிருக்கலாம் - ஆனால், கையாளவில்லை. அதன் பின்னர் மீண்டும் கதிரை விவகாரத்தை முன்வைத்து சுரேஷ் பிறேமச்சந்திரன் தலைமையிலான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வெளியேறியது. இப்போதும் மூத்த தலைவரான சம்பந்தன் விடயங்களை பக்குவமாகக் கையாண்டிருக்கலாம் - ஆனால், செய்யவில்லை. அதன் பின்னர், வடக்கு மாகாண முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரனுக்கும் சம்பந்தன் - சுமந்திரன் அணிக்கும் ஏற்பட்ட "ஈகோ" போட்டி காரணமாக விக்னேஸ்வரன் வெளியேறினார். அப்போதும் உடைவை தடுக்கும் வகையில் முதிர்ச்சியுடன் இரு தரப்பினரும் விடயங்களை கையாண்டிருக்கலாம் -ஆனால், நடக்கவில்லை. இறுதியில் இருபது வருடங்களுக்கு மேலாக ஒரு சின்னத்தின் கீழ் இயங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து உள்ளூராட்சித் தேர்தலில் அதிக ஆசனங்களை கைப்பற்ற வேண்டும் என்னும் நோக்கில் தமிழ் அரசுக் கட்சி வெளியேறியது. அத்துடன், கூட்டமைப்பு முற்றிலுமாக செயலிழந்தது. இப்போது

அந்தக் கட்சியின் எதிர்காலம் நீதிமன்றத்தில் இருக்கின்றது - இதற்கும் என்ன காரணம்? பதவிப் போட்டிதானே!

ஓரணியாக சிந்தித்த மக்களை கூறுபோட்டவர்கள் யார்? எதற்காக இவைகள் இடம்பெற்றன? ஒரு பொது வேட்பாளரை நிறுத்தினால் தமிழ் மக்கள் வாக்களிப்பார்களா என்று கேள்வி கேட்பவர்கள் இதுவரையில் நடந்தவற்றை எண்ணிப் பார்க்க வேண்டும். வரலாற்றிலிருந்து கற்றுகொண்டால் வரலாறு முழுவதும் தமிழ் மக்கள் கொள்கை நிலைப்பாடுகளை ஆதரித்தே வந்திருக்கின்றனர். தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் அனைவரும் உண்மையாக இருக்கின்றனர் - அவர்களிடம் போலித்தனம் இல்லை என்பதை மக்கள் உணர்ந்தால் நிச்சயம் ஆதரிப்பார்கள். ஆனால், கடின உழைப்புக்கும் தங்களின் உழைப்புமீது நம்பிக்கை வைக்கவும் தமிழ் கட்சிகள் தயாராக இல்லை. இதன் காரணமாகவே தமிழ் பொது வேட்பாளர் விடயத்தைப் பார்த்து அச்சப்படுகின்றனர் - இது பற்றி பேசுபவர்களைப் பற்றி அவதூறுகளை பரப்ப முற்படுகின்றனர். மக்களை நம்பி மக்களுக்காக உண்மையாக செயல்பட்டால் மக்கள் ஓரணியில் திரள்வார்கள்.

# சுதந்திரம் எங்களின் பிறப்புரிமை; வேறொருவர் தரவேண்டியதில்லை!

## யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர்

*யாழ்ப்பாணம், ஏப். 12*

சுதந்திரம் எங்கள் பிறப்புரிமை. அதை இன்னொருவர் எமக்கு எழுதித் தரவேண்டிய அவசியமில்லை. அதை இன்னொருவர் பறிக்கவும் முடியாது - இவ்வாறு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சி. சிறிசற்குணராஜா தெரிவித்துள்ளார்.

அத்துடன், தற்போது தேசியம் கதைக்கிறவர்கள் ஆசியாவிலேயே "பிஸி"யானவர்கள். வாழ்வதோ கொழும்பில். லண்டன் குடியுரிமையும் கொண்டுள்ள அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற சிறப்புரிமையையும் கொண்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் அண்மையில் நடந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், சுதந்திரக் காற்றை நீங்களாக சுவாசிக்க முடியாது. முன்னெடுப்புகள் இல்லாமல் எதையும் சாதித்து விடமுடியாது. இந்தியா ஒரு பெரிய நாடு. எத்தனையோ மொழிகளையும், எல்லைகள் அனைத்திலும் பயங்கரமான பிரச்னைகளைக் கொண்டதொரு நாடு. ஆனால், அங்கு எல்லாமிருக்கிறது.

தமிழ் மக்கள் தங்கள் பாதையை எவ்வாறு அமைத்துக் கொள்ளவேண்டும் என்பதில் கவனம் செலுத்தவேண்டும். அதற்காக புரட்சிதான் செய்யவேண்டுமென்று நான் சொல்லவில்லை. அவ்வாறு சொல்லி விட்டு நான் வீட்டுக்குச் செல்லமுடியாது.

யூதர்கள் அல்லது பலஸ்தீனியர்கள் முன்னர் எங்கு கண்டாலும் தங்களின் அடுத்த சந்திப்பு ஜெருசலேமில் என்று கைதட்டுவார்கள். நாங்கள் எங்களின் அடுத்த சந்திப்பு யாழ்ப்பாணத்தில் என்று கைதட்டுகின்றோமா? தற்போது தேசியம் கதைக்கிறவர்கள் ஆசியாவிலேயே "பிஸி"யானவர்கள். வாழ்வதோ கொழும்பில். லண்டன் குடியுரிமையும் கொண்டுள்ள அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற சிறப்புரிமையையும் கொண்டுள்ளனர்.

பலஸ்தீனம் போன்று எமது மண் பறிபோகவில்லை. நாங்கள் தற்போது பலஸ்தீனியர்கள் போன்று அகதி முகாம்களில் இருக்கவில்லை. எங்கள் தாய்நிலத்தைப் பாதுகாப்பதற்கான போதிய அறிவு எம் மத்தியிலுள்ளது. ஒரு பிரச்னையை தீர்ப்பதற்கு புரிந்துணர்வு பண்பு ஒவ்வொருவருக்கும் தேவையானதொன்று. ஆக்கிரமிக்கும் இனத்தின் செயல்பாடுகளைத் தமிழ் மக்கள் புரிந்து கொண்டு தங்களைப் பாதுகாக்கவேண்டும் - என்று கூறினார்.

(ஐ)

# குடும்பத்தினருக்கும் காப்புறுதி கோரும் பாராளுமன்ற உறுப்பினர்கள்!

*கொழும்பு, ஏப். 12*

தமது குடும்ப உறுப்பினர்களுக்கும் காப்புறுதி பணம் வழங்குமாறு, பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் கோரிக்கை விடுத்துள்ளனர் என்று தெரிய வருகின்றது.

இது தொடர்பான கோரிக்கை பாராளுமன்றத் தலைவர்களிடம் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மாத்திரம் தற்போது காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஆண்டுதோறும் வழங்கப்படும் காப்பீட்டுத் தொகையின் மதிப்பு 10 இலட்சம் ரூபாய் ஆகும்.

இந்தநிலையில் அந்த காப்புறுதித் தொகையில் இருந்து குறிப்பிட்ட தொகையை குடும்ப உறுப்பினர்களுக்கும் காப்பீட்டுத் தொகையாக வழங்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் வாரங்களில் பாராளுமன்ற சபைக் குழுவின் கூட்டம் நடைபெறவுள்ளது. இதன்போது இந்தவிடயம் தொடர்பில் கலந்துரையாட உள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)

# வடக்கு ஆளுநருடன் கேப்பாபிலவு காணி போராட்டக்காரர்கள் சந்திப்பு

*யாழ்ப்பாணம், ஏப். 12*


கேப்பாபிலவில் இராணுவம் ஆக்கிரமித்துள்ள தமது காணி களை விடுவித்துத் தருமாறு கோரி வடக்கு ஆளுநர் திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸை காணி உரிமையாளர்கள் நேற்று சந் தித்து கோரிக்கை விடுத்தனர்.

யாழ்ப்பாணத்தில் அமைந் துள்ள ஆளுநர் செயலகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது. இதில், இராணுவம் ஆக்கிர மித்த காணிகளின் உரிமையா ளர்களின் சார்பாக 6 பேர் பங் கேற்றனர்.

முல்லைத்தீவு கேப்பாபிலவில் இராணுவம் மக்களுக்கு சொந்தமான 59.5 ஏக்கர் காணியை ஆக்கிரமித்துள்ளது. தமது சொந்தக் காணிகளை விடுவிக்கக்கோரி மக்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் ஓர் அங்க மாகவே நேற்றைய தினம் காணி களின் உரிமையாளர் கள் வடக்கு ஆளுநரை சந்தித்தனர்.

(ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் -மனைவிக்குள் இருந்து வந்த பிரச்னைகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**இடபம்**
ராசிக்கு சந்திரன் இருப்பதாலும் ஓய்வின்றி உழைக்க வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும். நேர் மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**மிதுனம்**
எளிதாக முடிய வேண்டிய விஷயங்கள் கூட பல முறை போராடி முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். நிதானம் தேவைப்படும் நாள்.

**கடகம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். உறவினர் நண்பர்களால் அனுகூலம் உண்டு. உத்தியோகத்தில் உங்கள் திறமை வெளிப்படும். மதிப்புக் கூடும் நாள்.

**சிம்மம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். முடிவுகள் எடுப்பீர்கள். சாதிக்கும் நாள்.

**கன்னி**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் நீங்கி குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். நன்மைகள் நடக்கும் நாள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிக்கப் பாருங்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். ஆடை ஆபரணங்கள் புதிதாக வாங்குவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**தனுசு**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள், நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். சில புதுமைகளை செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**மகரம்**
புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். பிள்ளைகளின் உத்தியோகம் உயர் கல்வி பற்றி யோசிப்பீர்கள். செலவுகளை கட்டுப்படுத்துவீர்கள். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள்.

**கும்பம்**
பழைய பிரச்னைகளுக்கு சுமூக தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். உழைப்பால் உயரும் நாள்.

**மீனம்**
கம்பீரமாக பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். உடன்பிறந்தவர்களால் பயனடைவீர்கள். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள்.

# எதிலும் தமிழகம் முதலிடம் அரச ஆவணங்களே சாட்சி!

சென்னை, ஏப். 12

தமிழகம் எதிலும் முதலிடம் என்பதற்கு மத்திய அரசின் ஆவணங்களே சாட்சி. 50 சிறப்பு பொருளாதார மண்டலங்களை உருவாக்கி இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் பிடித்துள்ளது. முதல்வர் ஸ்டாலினின் திராவிட மொடல் தத்துவமே இந்தியாவின் எழுச்சிக்கு வழிகாட்டியாக உள்ளது என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

“மகப்பேற்றுக்குபின் கவனிப்பு, கணினி பொருள்கள் ஏற்றுமதி, இந்தியாவில் சிறப்பு பொருளாதார மண்டலங்கள் ஆகிய ஏழு பிரிவுகளின் ஆய்வுகள் குறித்த அறிக்கைகள் மத்திய அரசு நிறுவனங்களால் வெளியிடப்பட்டுள்ளன. அவை அனைத்திலும் தமிழ்நாடு மாநிலமே சிறந்து விளங்குவதாக அந்த அறிக்கைகளும் வரைபடங்களும் தெளிவுபடுத்துகின்றன - என்றார். (ஐ)

# இட ஒதுக்கீட்டை தாமதிக்காதீர்! பொறுமைக்கும் எல்லை உண்டு

## தி. மு. கவை எச்சரித்த பா. ம. க.

சென்னை, ஏப். 12

“வன்னியர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்குவதை தி. மு. க. அரசு அதன் விருப்பம் போல தாமதிக்க முடியாது. பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு. அந்த எல்லையைக் கடந்து போராடித் தான் இட ஒதுக்கீட்டை வென்றெடுக்க வேண்டும் என்றால் அதற்கும் பாட்டாளி மக்கள் கட்சி தயாராகத்தான் இருக்கிறது. இதை உணர்ந்து வன்னியர்களுக்கான இட ஒதுக்கீட்டை உடனடியாக வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்” என பா. ம. க. நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

“தமிழ்நாட்டில் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான 20வீத இட ஒதுக்கீட்டில், வன்னியர்களுக்கு 10.5வீத உள் இட ஒதுக்கீடு வழங்குவது குறித்து பரிந்துரை அளிக்க தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்துக்கு முதன்முதலில் வழங்கப்பட்ட காலக்கெடு முடிவடைந்து ஒரு வருடம் கடந்துள்ளது.

இதன் பின் இரு முறை நீட்டிக்கப்பட்ட தலா 6 மாத காலக்கெடுவும் நிறைவடைந்துள்ளது. ஆனாலும் வன்னியர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்க எந்த நடவடிக்கையையும் தமிழக அரசு மேற்கொள்ளாதது கண்டிக்கத்தக்கது - என்று ராமதாஸ் தனது சமூகவலைதளத்தில் தெரிவித்துள்ளார். (ஐ)

## தேர்தல் ஆணையத்தில் சீமான் முறைப்பாடு!



சென்னை, ஏப். 12

சீமானின் நாம் தமிழர் கட்சிக்கு மைக் சின்னம் தேர்தல் ஆணையத்தால் ஒதுக்கப்பட்டது. அந்த சின்னத்தின் வடிவிலான மைக்கையே பயன்படுத்தி நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அனைத்து தொகுதிகளிலும் வாக்கு சேகரித்து வருகிறார்.

இந்த சூழலில், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் தேர்தல் ஆணையம் ஒதுக்கிய வடிவிலான 'மைக்' சின்னத்தை பொருத்தாமல், வேறு வடிவில் உள்ள மைக் சின்னத்தை பொருத்துவதாக நாம் தமிழர் கட்சி எதிர்ப்பு தெரிவித்துள்ளது. அத்துடன், தேர்தல் ஆணையத்தில் முறைப்பாடு செய்துள்ளது.

வாக்குப் பதிவு இயந்திரங்களில் பொருத்தப்படும் சின்னத்தில் உள்ள மைக் வேறு வடிவம் என்பதால் தங்கள் கட்சியின் வாக்கு வங்கியை பாதிக்கும். அவற்றை அகற்றி, ஒதுக்கப்பட்ட மைக் சின்னம் பொருத்தப்பட வேண்டும் என்று அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## அமித் ஷா இன்று வருகிறார்

சென்னை, ஏப். 12

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா இன்று வெள்ளிக்கிழமை தமிழகம் வருகிறார். 2 நாட்கள் தமிழகத்தில் பா. ஜ. க. மற்றும் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து அவர் பிரசாரத்தில் ஈடுபடுவார்.

சிவகங்கை, மதுரை, கன்னியாகுமரி, திருச்சி, திருவாரூர், தூத்துக்குடி தொகுதிகளில் இந்த இரு நாட்களிலும் அவர் பிரசாரத்தில் ஈடுபடவுள்ளார்.

# அ. தி. மு. கவினர் எப்படியாவது 2ஆமிடத்துக்கு வந்துவிடுங்கள்!

## தி. மு. கவின் கோரிக்கை இது

திருவண்ணாமலை, ஏப். 12

“எப்படியாவது முயற்சி செய்து அ. தி. மு. க. நண்பர்கள் 2ஆவது இடத்துக்கு வந்துவிடுங்கள்”, என்று கூறியுள்ளார் தி. மு. க. அமைச்சர் எ.வ.வேலு.

திருவண்ணாமலை தொகுதியில் பிரசாரத்தில் ஈடுபட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், அ.தி.மு.க.வினரிடம் ஒன்று கேட்டுக்கொள்கிறேன். தயவு செய்து எப்படியாவது 2ஆவது இடத்துக்கு வந்துவிடுங்கள். பாரதிய ஜனதாவை வரவிடாதீர்கள். எப்படியாவது முயற்சி செய்து அ. தி. மு. க. நண்பர்கள் 2ஆவது இடத்துக்கு வந்து விடுங்கள் - என்றார். (ஐ)

## ஸ்டாலின், ராகுல்காந்தி ஒரே மேடையில் பிரசாரம்!

கோவை, ஏப். 12

கோவை மற்றும் பொள்ளாச்சியில் போட்டியிடும் தி. மு. க., வேட்பாளர்களை ஆதரித்து, தமிழக முதல்வர் ஸ்டாலின் மற்றும் காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி ஆகியோர் கோவையில் இன்று வெள்ளிக்கிழமை தேர்தல் பிரசாரம் செய்யவுள்ளனர்.


இந்தப் பிரசாரக் கூட்டத்தில் 12 சட்டசபை தொகுதிகளில் இருந்து ஒரு இலட்சம் பேரை திரட்டி வர வேண்டுமென, கட்சியினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சீனா இலங்கையில் முதலீடு செய்ய வெளிப்படையான சூழல் அவசியம்!

## சீன ஜனாதிபதி வலியுறுத்து

கொழும்பு, ஏப். 12

**சீன நிறுவனங்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கான வெளிப்படையான நியாயமான சூழல் அவசியம் என சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் சீனாவுகு விஜயம் மேற்கொண்ட இலங்கை பிரதமர் தினேஸ் குணவர்த்தனவுக்கு தெரிவித்துள்ளார்.**



இலங்கை தீர்மானங்களை எடுக்கும்போது வெளிநாடுகளின் செல்வாக்கிற்கு உட்படுவது குறித்தும் சீன ஜனாதிபதி கவலை வெளியிட்டுள்ளார்.

எனினும் இந்த பேச்சுவார்த்தைகள் சினேகபூர்வமான சுமூகமான முறையில் இடம்பெற்றதாகவும் சீன ஜனாதிபதி மூன்றாவது நாட்டின் பெயரை குறிப்பிடவில்லை எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, இலங்கை பிரதமருடனான சந்திப்பின் போது சீன பிரதமர் லீ கியாங் இலங்கை சீனாவின் ஆராய்ச் சிக்கப்பல்களுக்கு விதித்துள்ள தடை குறித்து அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

எரிபொருள் மீள்நிரப்புதலிற்காகவே ஜேர்மன் கப்பலுக்கு அனுமதி வழங்கபட்டதாக பிரதமர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை தனது நலன்களுக்கு எதிராக எந்த நாடும் தனது பகுதியை பயன்படுத்த அனுமதிக்கவில்லை எனவும் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். (அ)

# 6 கோடி ரூபா ஹெரோயினுடன் இளைஞன் பொலிஸாரால் கைது!

கொழும்பு, ஏப். 12

சுமார் 06 கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளை கடத்திய நபரை மாளிகாவத்தை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மாளிகாவத்தை பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த போதைப்பொருளை கிராண்ட்பாஸ் பகுதிக்கு கொண்டு செல்லும்போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக குறிப்பிடப்படுகின்றது.

அங்கு சந்தேகநபரிடம் இருந்து ஒரு கிலோ 105 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டதுடன், போதைப்பொருள் கடத்தல் மூலம் ஈட்டிய 750,000 ரூபாவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

சந்தேக நபர் வெல்லம்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞர் என்பதுடன், தற்போது டுபாயில் தலைமறைவாகியுள்ள “கெசல்வத்த தினுக“ என்ற ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல் தலைவரின் உதவியாளர் எனத் தெரிய வந்துள்ளது.

வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றுள்ள குற்றக் கும்பலைச் சேர்ந்தவர்களிடம் இருந்து கிடைக்கும் அறிவுறுத்தலின் அடிப்படையில் சந்தேக நபர் போதைப் பொருள்களை அந்தந்தப் பகுதிகளுக்கு எடுத்துச் சென்று விற்பனையாளர்களிடம் கொடுத்து பணப் பரிமாற்றம் செய்துள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (அ)

# சடுதியாக குறைவடைந்த காய்கறிகளின் விலைகள்

கிளிநொச்சி, ஏப். 12

கிளிநொச்சி மாவட்டத்தில் காய்கறிகளின் விலை சடுதியாகக் குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் ஒரு கிலோகிராம் கத்தரிக்காய்- 150 ரூபாய் வரையிலும், பயற்றை- 100 ரூபாய் வரையிலும், பூசனி- 100 ரூபாய் வரையிலும் ஏனைய காய்கறிகள் 150 ரூபாய் தொடக்கம் 200 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை காய்கறிகளின் விலையில் மாற்றம் ஏற்பட்டிருந்த போதிலும் கிருமிநாசினிகள், நாளாந்த கூலி, பசளை உள்ளிட்டவற்றில் மாற்றம் ஏற்படவில்லை எனவும் இதன் காரணமாக தோட்டச் செய்கையில் பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# போலி நாணயத்தாள் புழக்கம் அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 12

போலி நாணயத்தாள்களின் புழக்கம் அதிகரித்துள்ளதாகவும், பணத்தை கையாள்வதில் கவனமாக இருக்குமாறும் பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறிப்பாக கொழும்பு உள்ளிட்ட புறநகர் பகுதிகளிலும், பல பகுதிகளிலும் போலி நாணயத்தாள்களை பணத்தை மாற்றுவதற்கு நபர்கள் வரலாம் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவா தெரிவித்தார்.

மேலும் பண பரிவர்த்தனை செய்யும் போது எந்த பணத்தாளில் மாற்றம் இருந்தால் தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

# சுதந்திரக் கட்சியை ரணிலுடன் இணைக்கும் செயல்பாடு தீவிரம்

## உதய கம்மன்பில சுட்டிக்காட்டு



கொழும்பு, ஏப். 12

சுதந்திர கட்சியின் யாப்புக்கு முரணாகவே அரசியல் குழுக் கூட்டம் கூட்டப்பட்டு பதில் தலைவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

சுதந்திர கட்சியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒன்றிணைக்கும் செயற்பாடுகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றன என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கட்சியின் தலைவர் இல்லாமல் சுதந்திர கட்சியின் அரசியல் குழு கூட்டத்தை கூட்ட முடியாது.

கட்சியின் செயற்குழு மற்றும் நிறைவேற்று சபை ஊடாகவே தலைவரை நியமிக்க வேண்டும்.

தலைவராக பதவி வகித்த மைத்திரிபால சிறிசேனவுக்கு நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்தவுடன் அரசியலமைப்புக்கு முரணான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

சுதந்திர கட்சியின் தலைவரின் அழைப்புக்கு அமையவே கட்சியின் ஆலோசகர் கூட்டங்களில் பங்குப்பற்ற முடியும்.

ஆனால் தற்போது கட்சியின் ஆலோகரான சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் தலைமைத்துவத்தில் அரசியல் குழு கூட்டம் கூட்டப்பட்டு, தவறான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒன்றிணைக்கும் செயல்பாடுகள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தவறான தீர்மானங்களினால் கட்சி பலவீனமடைந்துள்ளது.

ஒரு தரப்பினர் இதனை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

பரந்துப்பட்ட அரசியல் கூட்டணி தொடர்பில் சகல தரப்பினருடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம்.

மே தினத்துக்கு முன்னர் புதிய அரசியல் கூட்டணியை வெகுவிரைவில் ஸ்தாபிப்போம்.

அரசியல் கட்சிகளை பிளவுப்படுத்தும் செயற்பாட்டை ஜனாதிபதி வெற்றிகரமாக முன்னெடுக்கிறார்-என்றார். (அ)

# துப்பாக்கி, வெடிபொருளுடன் மருதானையில் மூவர் கைது!

கொழும்பு, ஏப். 12

கொழும்பு, மருதானை பகுதியில் வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரி-56 ரக துப்பாக்கி உள்ளிட்ட வெடிபொருட்களுடன் சந்தேக நபர்கள் மூவர்கைது செய்யப்பட்டுள்ளனர்.

யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது விசேட அதிரடிப்படையினர் உள்ளிட்ட புலனாய்வு பிரிவினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது குறித்த வீட்டின் கூரையில் மறைத்துவைக்கப்பட்டிருந்தரி-56 ரக தானியங்கி துப்பாக்கி, 14 தோட்டக்களுடனான மகசின் மற்றும் கூரிய ஆயுதங்கள் சிலவும் இதன் போது கைப்பற்றப்பட்டுள்ளன.

திட்டமிடப்பட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடைய மருதானை பகுதியைச் சேர்ந்த 18 , 34 மற்றும் 47 வயதுடைய சந்தேக நபர்கள் மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள னர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக மருதானை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப் பட்டுள்ளனர்.

(அ)

# வெட்டுக் காயங்களுடன் பெண்ணின் சடலம் மீட்பு

கொழும்பு, ஏப். 12

பாரிய வெட்டுக் காயங்களுடன் பெண் ஒருவரின் சடலம் ஊரகஸ்மங்கந்திய மீகஸ்பிட்டிய பகுதி வியாபார நிலையம் ஒன்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் ஸ்டிக்கர் தயாரிப்பு நிலையம் ஒன்றினுள் இருந்து நேற்று இச்சடலம் மீட்கப்பட்டதாக ஊரகஸ்மங்ஹந்திய பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் குறித்த வியாபார நிலையத்தின் உரிமையாளரின் 41 வயதான மனைவியாவார் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவர் தனது கணவருடன் இங்கு வசித்து வந்ததாக ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

(அ)

# பாடசாலை அதிபரையும் கல்விப் பணிப்பாளரையும் விசாரணைக்கு அழைத்த மனித உரிமை ஆணைக்குழு!

யாழ்ப்பாணம், ஏப். 12

வடமராட்சியில் உள்ள ஆரம்பப் பாடசாலையொன்றின் அதிபரையும் வடமராட்சி வலயக்கல்வி பணிப்பாளரையும் எதிர்வரும் 24 ஆம் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண அலுவலகத்தில் முன்னிலையாகி பாடசாலையில் நிதி சேகரிப்பு தொடர்பில் விளக்கமளிக்குமாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

குறித்த பாடசாலையின் அதிபர் உள்ளிட்ட சிலர் வாட்ஸப் சமூக ஊடக குழு ஒன்றின் மூலம் மாணவர்களின் பெற்றோர்களிடம் பணம் பெற்று வந்துள்ளதாக நேற்று புதன்கிழமையன்று செய்திகள் வெளியாகி இருந்தன.

அந்தவகையில் குறித்த பாடசாலையின் நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டு விட்டதாக நேற்று முன்தினம் ஒரு தரப்பினர் போராட்டம் செய்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த நிதி சேகரிப்பு குறித்து விசாரணை நடத்துவதற்காக இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

### புத்தாண்டை முன்னிட்டு

# 13 இலட்சம் பேர் சொந்த ஊருக்கு!

கொழும்பு, ஏப். 12

**சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டை முன்னிட்டு கொழும்பிலிருந்து தமது சொந்த ஊர்களுக்கு செல்பவர்களின் எண்ணிக்கை 13 இலட்சத்தை தாண்டியுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணையம் தெரிவித்துள்ளது.**

அதன்படி, சொந்த ஊரை நோக்கி பயணிக்கும் பொது மக்களுக்காக தேசிய போக்குவரத்து ஆணையம், இலங்கை ரயில்வே திணைக்களம் மற்றும் மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து திணைக்களம் இணைந்து போக்குவரத்து திட்டமொன்றை அமுல்படுத்தியுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணையத்தின் தலைவர் நயோமி ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

குறித்த போக்குவரத்து திட்டத்தின் கீழ் புத்தளம், தம்புள்ளை, கண்டி, காலி, ஹைலெவல் வீதி ஆகிய நாளாந்தம் கொழும்பிலிருந்து பேருந்துகள் வெளியேறும் பிரதான பாதைகள் ஐந்திலும் பேருந்து போக்குவரத்து 700 வரையில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஹைலெவல் வீதியின் மாகும்புர, கடவத்தை, மத்திய பேருந்து நிலையம், பஸ்டியன் வீதியிலிருந்து பேருந்து போக்குவரத்து வழமையை விட 150ஆல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பஸ்டியன் வீதியில் பேருந்து தரிப்பிடத்துக்கு வருகைத் தரும் அங்கவீனர்கள் மற்றும் கர்ப்பிணி தாய்மார்கள் உள்ளிட்ட பயணிகளின் தேவைக்காக நீர் மற்றும் முதலுதவிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குறித்த சேவைகளை பயன்படுத்தும் போது ஏதேனும் இடையூறுகள் இருப்பின் அது தொடர்பில் 071 25 95 555 எனும் இலக்கத்துக்கு வாட்ஸ்-அப் குறுஞ்செய்தி மூலம் புகார் வழங்க முடியும் என தலைவர் நயோமி ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இதற்கு மேலதிகமாக, ரயில் -1971, போக்குவரத்து ஆணையம்-1955 போன்ற அவசர இலக்கங்களினூடாக குறித்த சேவைகள் தொடர்பில் தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும்.

(அ)

# நிர்ணய விலையை மீறி பொருள்கள் விற்பனை!

## விசேட சோதனைகள் தீவிரம்

கொழும்பு, ஏப். 12

நிர்ணய விலையை மீறி அரிசி, அழகுசாதனப் பொருட்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களை விற்பனை செய்பவர்களை கண்டறிவதற்காக 7,500 இற்கும் அதிகமான விசேட சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நுகர்வோர் விவகார அதிகார சபை இதனைத் தெரிவித்துள்ளது.

அதன்படி, இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 7,662 சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நிர்ணய விலையை மீறி பொருட்களை விற்பனை செய்தவர்கள் தொடர்பில், கடந்த 10 நாட்களில் மாத்திரம் 725 சோதனைகள் நடத்தப்பட்டுள்ளதாக விசேட சோதனை மற்றும் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் சஞ்சய இரசிங்க அறிவித்துள்ளார்.

பண்டிகைக் காலங்களில் பொருட்களை கொள்வனவு செய்யும் போது காலாவதி திகதி மற்றும் அதன் தரம் தொடர்பில் மிகவும் அவதானமாக செயல்படுமாறு நுகர்வோர் விவகார அதிகார சபை பொது மக்களை கோரியுள்ளது.

(அ)

# விமானப்படையினர் எண்ணிக்கை 2030 இல் 18 ஆயிரமாகக் குறையும்!

கொழும்பு, ஏப். 12

விமானப்படையில் சேவையாற்றும் 35,000 விமானப்படை வீரர்களின் எண்ணிக்கை 2030 ஆம் ஆண்டளவில் 18,000 ஆக குறைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குறைக்கப்பட்ட விமானப்படையினரின் எண்ணிக்கைக்கு பதிலாக நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்த நம்புவதாகவும் விமானப்படை தளபதி கூறினார்.

அக்குரகொட விமானப்படைத் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் விமானப்படைத் தளபதி இதனை குறிப்பிட்டார்.

நாங்கள் ஏற்கனவே விமானப்படையைக் குறைக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறோம்.

தொழில்நுட்பம் அவ்வப்போது மாறுவதால், விலையும் குறைகிறது. சிசிரிவி நமக்கு புதிதல்ல. அத்தகைய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம், விமானப்படையை ஓரளவு குறைக்கும் திறன் நம்மிடம் உள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ)

# இழுபறியில் இருந்த இரணைமடு சிறு போகச் செய்கைக்கு தீர்வு!

கிளிநொச்சி, ஏப். 12

நீண்ட இழுபறியில் இருந்த இரணைமடு குளத்தின் கீழான சிறு போக செய்கைக்கு தீர்வு எட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்தின் பாரிய நீர்ப்பாசனக்குளமாகிய இரணைமடு குளத்தின் கீழ், 2024ஆம் ஆண்டுக்கான சிறுபோக செய்கை சம்மந்தமான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்கதிபர் எஸ். முரளிதரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில் கரைச்சி பிரதேச செயலாளர், கமநல அபிவிருத்தி திணைக்கள மாவட்ட பிரதி ஆணையாளர், நீர்ப்பாசன பொறியியலாளர், இரணைமடு கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளனத்தின் கீழ் உள்ள 22 கமக்காரர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

கடந்த 8ஆம் திகதி திங்கட்கிழமை மாவட்ட பதில் அரசாங்கதிபர் தலைமையில் மாவட்ட செயலகத்தில் விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலையடுத்து சுழற்சி முறையில் 15560 ஏக்கர் செய்கை பண்ணுவதாக தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும் குறித்த சுழற்சி முறைக்கு விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர். இந்த நிலையில் நேற்றைய தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் சுழற்சி முறையை தவிர்த்து பங்கீட்டு முறையில் வழமை போன்று செய்கை மேற்கொள்வதாக தீர்மானம் எட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் உயர் ரக ஸ்கானிங் இயந்திரங்கள்!

கொழும்பு, ஏப். 12

கட்டுநாயக்க விமான நிலையம் மற்றும் கொழும்பு துறைமுகத்தில் செயற்படுவதற்காக 8.4 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான உயர் தொழில்நுட்ப ஸ்கானிங் இயந்திரங்கள் ஜப்பானிய அரசாங்கத்தினால் கையளிக்கப்பட்டுள்ளன.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் முதல் தொகுதி உபகரணங்களை துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவிடம் கையளித்தார்.

இந்த ஸ்கேனிங் இயந்திரங்கள் மூலம் பொது சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும் தொற்றுநோய்கள், தொற்று நோய்கள் போன்ற நோய்கள் கண்காணிக்கப்படவுள்ளது.

அத்துடன் இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு செயல்படுத்தியுள்ள இந்தத் திட்டத்தின் கீழ், நோய்களைக் கண்டறியும் ஸ்கானர்கள், முழு உடல் ஸ்கானர்கள், வெளிநாட்டு கடவுசீட்டுக்கான ஸ்கானர்கள் மற்றும் பயோமெட்ரிக் அணுகல் கட்டுப்பாட்டு அமைப்பு ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.

இது தவிர கட்டுநாயக்க விமான நிலையத்தில் 150 அலகுகளைக் கொண்ட ஸ்மார்ட் மலசலகூட அமைப்பையும் இந்த திட்டம் நிறுவவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# 30 இலட்சம் குடும்பங்களுக்கு 10 கிலோகிராம் வீதம் அரிசி!

கொழும்பு, ஏப். 12



அரசாங்கத்தினால் 10 கிலோகிராம் வீதம் 30 இலட்சம் குடும்பங்களுக்கு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த அரிசியை புத்தாண்டுக்கு முன்னதாக வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

குறித்த அரிசித் தொகையை இம்மாதம் 21ஆம் திகதி மற்றும் மே மாதத்தில் வழங்குவதற்கு அரசாங்கத்தால் திட்டமிடப்பட்டிருந்தாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், புத்தாண்டுக்கு முன்னர் விநியோகிக்கக் கூடிய அனைத்து பிரதேசங்களிலும் அரிசி விநியோகிக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

(அ)

# கிளிநொச்சியில் களைகட்டும் சித்திரை புதுவருட வியாபாரம்

கிளிநொச்சி, ஏப். 12

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைக்கு மத்தியில் மக்கள் புத்தாண்டு நிகழ்வுகளுக்கு தேவையான பொருட்களை கொள்வனவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டது.

வடமாகாணத்தின் கிளிநொச்சி மாவட்டத்தை பொறுத்தவரை புத்தாடை கொள்வனவில் மக்கள் ஆர்வம் காட்டுவதாக கூறப்படுகின்றது.

அதேவேளை கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இவ்வருடம் புத்தாடை கொள்வனவில் அதிக ஆர்வம் மக்கள் மத்தியில் காணப்படுகின்றது.

இம்முறை சித்திரை புதுவருடத்தை ஒட்டிய நீண்ட விடுமுறை அறிவிக்கப்பட்டதன் காரணமாக பணி நிமிர்த்தம் வெளிமாவட்டங்களில் தங்கியியுள்ளவர்கள் தமது சொந்த ஊர்களுக்கு வருகை தந்து புத்தாண்டை கொண்டாடுவதற்கு ஆயத்தமாகி வருகின்றனர்.

(அ)

# பாதாள உலக குழுக்களை சேர்ந்த ஆறு பேர் சிக்கினர்!

கொழும்பு, ஏப். 12

பாதாள உலக செயல்பாடுகளை ஒடுக்குவதற்காக உருவாக்கப்பட்ட விசேட 20 குழுவினரால் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் பாதாள உலக குழுக்களைச் சேர்ந்த 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது பாதாள உலகக் குழுக்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணியதாகக் கூறப்படும் 7 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேல் மாகாணத்தின் தெற்கு பிராந்திய பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினரால் தோம்பே, அங்கொடை ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் வானலுவாவ மற்றும் கொழும்பு 14 ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 35 மற்றும் 36 வயதுடைய இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினரால் மட்டக்குளி, கிராண்ட்பாஸ் ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் மட்டக்குளி மற்றும் அங்கொடை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 37 மற்றும் 21 வயதுடைய இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

களுத்துறை பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினரால் மத்துகம, கல்கிஸ்ஸை ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் மத்துகம மற்றும் அத்திட்டிய ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 47 மற்றும் 37 வயதுடைய இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(அ)

# அரசியலில் இருந்து உடன் ஒதுங்குங்கள்!

## முன்னாள் ஜனாதிபதிகளுக்கு டலஸ் எம்.பி பகிரங்க அறிவிப்பு

கொழும்பு, ஏப். 12

**தீவிர அரசியலில் ஈடுபட்டுள்ள நான்கு முன்னாள் அதிபர்களும் தமது சொந்த நலனுக்காகவும், மக்களுக்காகவும் தீவிர அரசியலில் இருந்து ஒதுங்க வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.**



முன்னாள் அதிபர்களான மகிந்த ராஜபக்ச, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மைத்திரிபால சிறிசேன மற்றும் கோட்டாபய ராஜபக்ச ஆகியோர் தீவிர அரசியலில் இருந்து ஒதுங்கி இருக்க வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

"அரசியலில் இருந்து விலகி இருப்பது அவர்களின் சொந்த ஆரோக்கியத்திற்கும், மக்களின் நலனுக்கும் நல்லது.

அவர்களுக்காக செலவிடப்படும் பொது நிதியை எந்த அரசியல் விஷயத்திற்கும் பயன்படுத்தக்கூடாது" என்று அவர் குறிப்பிட்டார்.

"அமெரிக்க ஜனாதிபதி ஜோன் குயின்சி அடம்ஸ் ஒரே ஒரு முறை அமெரிக்க காங்கிரஸூக்கு போட்டியிட்டார்.

பதவியில் இருந்து ஓய்வு பெற்ற பிறகும் அரசியலில் இருக்கும் ஒரே வெளிநாட்டு தலைவர் அவர் தான்," என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)



# தெல்லிப்பழை நூலகத்தில் டிஜிற்றல் மையம் திறப்பு

யாழ்ப்பாணம், ஏப். 12

தெல்லிப்பழை பொது நூலகமானது டிஜிட்டல் மயப்படுத்தப்பட்டு, நூலக நுழைவு வாயில் போன்றவற்றின் அங்குரார்ப்பணம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

வலி வடக்கு பிரதேச சபையின் செயலாளர் சு.சுதர்ஜன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் செல்லத்துரை பிரணவநாதன் கலந்து சிறப்பித்தார்.

ஏற்கனவே செயற்பாட்டிலிருந்த நூலகத்திற்கு வலி.வடக்கு பிரதேசபை நிதியில் முகப்பு வாயில், தோரண வாயில் அமைக்கப்பட்டதுடன், ஆசிய மன்றத்தின் நிதி உதவியுடன் டிஜிட்டல் அறிவு மையமும் அமைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் பிரதேச சபை ஊழியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)

# போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட ஆசிரியை, தாயார் கைது!

கொழும்பு, ஏப். 12

போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் ஆசிரியை உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வியங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

28 வயதுடைய ஆசிரியை ஒருவரும் 46 வயதுடைய அவரது தாயாருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் நிட்டம்புவ பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசாரணையில் சந்தேக நபரான ஆசிரியையிடமிருந்து 2,300 மில்லிகிராம் ஹெரோயினும் அவரது தாயாரிடமிருந்து 4,500 மில்லிகிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து சந்தேக நபர்கள் இருவரும் அத்தனகல்லை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

# பெண் அரசாங்க உத்தியோகத்தரை அச்சுறுத்திய இராஜாங்க அமைச்சர்

## விசாரணை நடத்துமாறு கோரிக்கை

கொழும்பு, ஏப். 12

அமைச்சு அதிகாரிகள் முன்னிலையில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசாநாயக்க, அரச உத்தியோகத்தர் ஒருவரை அச்சுறுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

லங்கா பொஸ்பேட் நிறுவனத்தின் மனித வள மற்றும் நிர்வாக உதவியாளரான வீ.சே. சந்திரரட்ன என்ற பெண் உத்தியோகத்தர் இவ்வாறு அச்சுறுத்தப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கூட்டமொன்றிற்கு அழைத்து அதிகாரிகள் முன்னிலையில் தம்மை மோசமாக அச்சுறுத்தியதாகவும், இழிவாக பேசியதாகவும் குறித்த பெண் உத்தியோகத்தர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த பெண் உத்தியோகத்தர், ஊழியர் ஒருவரை துன்புறுத்தினார் என குற்றம் சுமத்தியே இராஜாங்க அமைச்சர் தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இவ்வாறு உத்தியோகத்தர்கள் எதிர்வரும் காலங்களில் அச்சுறுத்தப்பட்டால் தொழிற்சங்க நடவடிக்கை எடுக்க நேரிடும் என சுதந்திர தொழிலாளர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (அ)

# 2023 ஆம் ஆண்டு தொடக்கத்தில் இருந்து இதுவரை 8,146 பேர் இராணுவத்திலிருந்து தப்பியோட்டம்

கொழும்பு, ஏப். 12

2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து 2024 ஆம் ஆண்டு வரை ஆயுதப்படையின் 197 அதிகாரிகள் உட்பட 8146 பேர் இராணுவ சேவையிலிருந்து தப்பிச் சென்றுள்ளனர் என தெரியவந்துள்ளது.

அதன்படி மார்ச் மாதத்தில் மட்டும், ஆயுதப்படைகளின் ஒன்பது அதிகாரிகளுடன் 442 பேர் ஆயுதப்படையை விட்டு வெளியேறியுள்ளனர்

மேலும் கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் இராணுவ சேவையை விட்டு வெளியேறியவர்களில் 137 இராணுவ அதிகாரிகள், 18 கடற்படை அதிகாரிகள் மற்றும் 19 விமானப்படை அதிகாரிகள் இராணுவ சேவையை விட்டு வெளியேறியுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானோர் பொருளாதார பிரச்னைகள் மற்றும் நிர்வாக பிரச்னைகள் காரணமாக இராணுவத்தை விட்டு விலகியுள்ளமையும் தெரியவந்துள்ளது. (அ)

# நீண்ட தூர பஸ்களில் செல்லும் பயணிகளிடம் திருடும் கும்பல்

கொழும்பு, ஏப். 12

தமிழ்-சிங்கள புத்தாண்டு முன்னிட்டு நீண்ட தூர பஸ்களில் பயணிக்கும் பயணிகளின் பெறுமதியான பொருட்களைத் திருடும் கும்பல் தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளது.

இதனால் பஸ்களில் பயணிக்கும் பயணிகள், பஸ் சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு பொலிஸார் கேட்டுள்ளனர்.

பதுளை - கொழும்பு நோக்கி செல்லும் நீண்ட தூர பஸ் சேவைகளில் இந்த திருட்டு சம்பவங்கள் அதிகம் இடம்பெறுவதாக பொலிஸார் கூறினர்.

இந்த திருட்டுக் கும்பல் விடுமுறைக்காக ஊருக்குச் செல்லும் சக பயணிகளாக தங்களைக் காண்பித்து பயணிகளின் பெறுமதியான பொருட்களைத் திருடுவதாகத் தகவல் வெளியாகியுள்ளது. (அ)

# சதொசவில் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டன

கொழும்பு, ஏப். 12

தமிழ் - சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு லங்கா சதொச நிறுவனம் பல அத்தியாவசிய பொருட்களின் விலைகளைக் குறைத்துள்ளது.

இதன்படி, நெத்தலி ஒரு கிலோ 125 ரூபாயால் குறைக்கப்பட்டது. இதன்படி, புதிய விலை 1,200 ரூபாயாகும்.

சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் வெங்காயம் ஒரு கிலோ 55 ரூபாயால் குறைக்கப்பட்டு 320 ரூபாயாகவும், கோதுமை மா ஒரு கிலோ 7 ரூபாய் குறைக்கப்பட்டு 185 ரூபாயாகவும், வெள்ளை கெகுளு அரிசி ஒரு கிலோ 4 ரூபாய் குறைக்கப்பட்டு 185 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

இதனிடையே, தமிழ் - சிங்களப் புத்ததண்டை முன்னிட்டு கொழும்பிலுள்ள லங்கா சதொச விற்பனை நிலையங்கள் எதிர்வரும் 13 ஆம் திகதி மதியம் ஒரு மணி வரையும், நாடளாவிய ரீதியிலுள்ள ஏனைய சதொச விற்பனை நிலையங்கள் எதிர்வரும் 13ஆம் திகதி மாலை 6 மணி வரையும் திறந்திருக்கும் என லங்கா சதொச நிறுவனம் அறிவித்துள்ளது. (ஐ)

# சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட 4 பேர் கைது!

நுவரெலியா, ஏப். 12

அனுமதிப்பத்திரம் இன்றி சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மஸ்கெலியா பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மஸ்கெலியா , பிரவுன்ஸ்விக் பிரதேசத்தைச் சேர்ந்த 36, 37, 40 மற்றும் 42 வயதுடையவர்களாவர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மஸ்கெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# போதைப் பொருளுக்கு எதிரான மட்டக்களப்பில் விழிப்புணர்வு!

மட்டக்களப்பு, ஏப். 12

**மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்துள்ள போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்தும் வகையில் போதைப் பொருள் தடுப்பு மற்றும் விழிப்புணர் துண்டுப்பிரசுரம் மற்றும் விழிப்புணர்வு ஸ்ரிக்கர் காட்சிப்படுத்தும் நடவடிக்கை இன்று நகர் பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.**

கிழக்கு மாகாண புனர்வாழ்வு பொறுப்பதிகாரி கேணல் சனத் அபே திலக்க தலைமையில் போதைப் பொருள் தடுப்பு கிழக்கு மாகாண புனர்வாழ்வு நிலையம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட செயலக போதைப் பொருள் தடுப்பு பிரிவு ஒழுங்கு படுத்தலின் கீழ் போதையற்ற நாடு சௌபாக்கியமான தேசம் எனும் தொனிப்பொருளில் இவ் விழிப்புணர்வு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

வீதியில் பயணிக்கும் அரச, தனியார் பேருந்துகளில் ஸ்ரிக்கர் காட்சிப்படுத்தப்பட்டதோடு பயணிகளுக்கும் துண்டுப்பிரசுரங்கள் வழங்கப்பட்டன.

போதைப்பொருள் தடுப்பு மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் ப.தினேஸ், புனர்வாழ்வு பணியக உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக போதைப்பொருள் தடுப்பு உத்தியோகத்தர் வி.ஜெகன் என பலரும் இதில் கலந்துகொண்டனர். (அ)

# வீடொன்று தீக்கிரையானதில் அக்கரைப்பற்றில் ஒருவர் பலி!

அம்பாறை, ஏப். 12

அம்பாறை அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கோளாவில் 02 பிரதேசத்தில், நேற்று முன் தினம் இரவு வீடொன்று முற்றாக எரிந்த நிலையில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

39 வயதுடைய இரு பிள்ளைகளின் தந்தையே தீயில் கருகி சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் இடம்பெற்ற வீடானது, ஒரு பகுதி முற்றாக கல் வீடாகவும் மறுபகுதி கூரைப்பகுதியாகவும் காணப்பட்டுள்ளது.

சம்பவம் நடைபெற்றபோது மனைவி, பிள்ளைகள் அனைவரும் உறவினர்கள் வீட்டில் தங்கி இருந்ததாக கூறப்படுகின்றது.

சம்பவ இடத்திற்கு விரைந்த அக்கரைப்பற்று பொலிசார் விசாரணையினை ஆரம்பித்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளுக்காக உயர் அதிகாரிகளுக்கும் விசேட தடயவியல் பொலிசாருக்கும் அறிவித்துள்ளனர். (அ)



# மாளிகைக்காட்டில் நோன்புப் பெருநாள்

அம்பாறை, ஏப். 12

ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் தொழுகையும் குத்பாப் பிரசங்கமும் நேற்று முன் தினம் புதன்கிழமை மாளிகைக்காடு அந் நூர் ஜும்மா பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்றது.

மாளிகைக்காடு அந் நூர் ஜும்மா பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையினரால் வழமை போன்று இந் நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

பெருநாள் தொழுகையும் குத்பாப் பிரசங்கமும் அந் நூர் ஜும்மா பெரிய பள்ளிவாசல் பேஷ் இமாம் அஷ்ஷெய்க் ஏ. எம்.எம். மின்ஹாஜினால் (உஸ்மாணி) நடத்தப்பட்டன.

நோன்புப் பெருநாள் தொழுகையில் மார்க்க அறிஞர்கள், ஊர் பிரமுகர்கள், ஊடகவியலாளர்கள், புத்திஜீவிகள், ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், யுவதிகள், சிறுவர்கள் என பெருந்திரளானோர் கலந்து கொண்டிருந்தனர். (அ)

# கொக்கட்டிச்சோலையில் வயல் விழா

மட்டக்களப்பு, ஏப். 12

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலை விவசாய விரிவாக்கல் நிலைய பகுதியில் விவசாய போதனாசிரியர் என். பார்த்திபன் தலைமையில் வயல்விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.



பரசூட் முறையிலான நெற் செய்கையின் நன்மைகள் பற்றிய தெளிவான விளக்கங்களுடன் பரசூட் முறையில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பங்கள் என்பன முறையான செய்து காட்டல்கள் மூலம் விவசாய போதனாசிரியர்களால் விளக்கமளிக்கப்பட்டது.

நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் எம். பரமேஸ்வரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

சிறப்பு அதிதிகளாக உதவி விவசாய பணிப்பாளர்களான திருமதி நித்தியா நவரூபன், எஸ்.சித்திரவேல் பாடவிதான உத்தியோகத்தர்களான திருமதி லாவண்யா செந்தீபன், லக்ஸ்மன், மாறன் ஆகியோருடன் தெற்கு வலய விவசாய போதனாசிரியர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர், கமநல சேவை நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கொக்கட்டிச்சோலை விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது ஏற்கனவே பரசூட் தட்டுக்களில் இடப்பட்ட நாற்றுகள் நடுகை செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

பரசூட் முறையிலான நெற் செய்கையின் போது எமது செலவினை குறைத்து அதிக விளைச்சலை பெற்றுக்கொள்ள முடியும். பொதுவாக ஒரு ஏக்கருக்கு 8-12 கிலோ விதைநெல் போதுமானது என்பதால் மிகக் குறைந்த செலவே ஏற்படும் எனவே விவசாயிகள் புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி அதிக வருமானம் ஈட்டுவதற்கு விவசாய திணைக்களத்துடன் சேர்ந்து முயற்சிக்க வேண்டும் என பிரதி விவசாய பணிப்பாளரும் தன்னுடைய உரையில் கேட்டுக்கொண்டார். (அ)

# வலயக் கல்விப் பணிப்பாளரை இடமாற்றம் செய்யவேண்டாம்

## பட்டிருப்பில் கவனயீர்ப்பு போராட்டம்

மட்டக்களப்பு, ஏப். 12

மட்டக்களப்பு பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளரை இடமாற்றம் செய்யவேண்டாம் என வலியுறுத்தி கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த சில நாட்களாக மட்டக்களப்பு பட்டிருப்பு வலயக் கல்விப்பணிப்பாளருக்கு எதிராக நடைபெறும் போராட்டங்களுக்கு எதிராக, நேற்று முன் தினம் வலயக் கல்விப் மணிமனைக்கு முன் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பெற்றோர்கள், அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் இப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.




அதிபர்கள் வேண்டாம், வேண்டாம் அரசியல் வேண்டாம், நிர்வாக நடவடிக்கையை குழப்பும் நபர்களின் நாசகார செயலை நம்பாதீர்கள், நேர்மையான வலயக் கல்விப் பணிப்பாளர் எங்களுக்கு தொடர்ச்சியாக வேண்டும், கிராமப்புற பாடசாலைகளை வாழவைக்க வந்த வலயக் கல்விப் பணிப்பாளரை வேலை செய்ய விடு, கௌரவ ஆளுநரே எமது பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தில் அக்கறை காட்டும் வலயக் கல்விப் பணிப்பாளரை வேலை செய்ய விடு, வலயக் கல்விப் பணிப்பாளரை சுயமாக இயங்கவிடு போன்ற பதாதைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர்கள், தங்களது கோரிக்கை அடங்கிய மகஜரை கிழக்கு மாகாண ஆளுநருக்கு கையளிப்பதற்காக அங்கு வருகை தந்திருந்த அதிபர்களிடம் மகஜரையும் கையளித்தனர். (அ)

# பிறைட் அமைப்பினரால் அதிதிகளுக்கு கௌரவம்



அம்பாறை, ஏப். 12

பாலமுனை பிறைட் அமைப்பின் இப்தார் நிகழ்வு பாலமுனை தனியார் மண்டபத்தில் அதன் தலைவர் ஏ.எல்.எம்.அர்தாத் தலைமையில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

இந் நிகழ்வில் தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம்.அதாவுல்லா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

விஷேட அதிதிகளாக எம். கே. இப்னு அசார் பிறைட் அமைப்பின் ஆலோசகரும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் (ஏ.எஸ்.பி ) பாலமுனை ஜும்ஆப்பள்ளி தலைவர் எம்.ஏ.அன்சார் மற்றும் முன்னாள் அட்டாளைசேனை பிரதேசசபை உறுப்பினர்கள், தொழிலதிபர்கள், எம்.ஏ.எம். அபூபக்கர், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

பிறைட் அமைப்பினரால் அதிதிகள் பொன்னாடை போர்த்தியும் நினைவுச்சின்னங்கள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர். (அ)

## இஸ்ரேலின் வான் தாக்குதலில்

# ஹமாஸ் தலைவரின் 3 மகன்கள் 3 பேரக் குழந்தைகள் உயிரிழப்பு!

ஜெருசலேம், ஏப். 12

**காசாவில் இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் தனது மூன்று புதல்வர்களும் 3 பேரக் குழந்தைகளும் கொல்லப்பட்டுள்ளதை ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே உறுதி செய்துள்ளார்.**

**இஸ்ரேலிய இராணுவம் தங்கள் குடும்பத்தவர்களை கொலை செய்கின்றது என்பதற்காக ஹமாஸ் தலைவர்கள் பின்வாங்கமாட்டார்கள் என குறிப்பிட்டுள்ள அவர் இது யுத்த நிறுத்த பேச்சுவார்த்தைகளிற்கான ஹமாசின் வேண்டுகோள்களை பாதிக்காது எனவும் தெரிவித்துள்ளார்.**

தனது குடும்பத்தின் மீதான தாக்குதல் இஸ்ரேலின் தோல்வியை வெளிப்படுத்துகின்றது என தெரிவித்துள்ள ஹமாஸின் தலைவர் எனது பிள்ளைகளின் இரத்தம் பலஸ்தீன மக்களின் பிள்ளைகளை விட பெறுமதியானது இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

காசா நகரில் உள்ள கடற்கரையோர அகதி முகாம் மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலின் போதே இவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஹமாஸ் தலைவரின் மகன் ஒருவர் பெப்ரவரி மாதம் இஸ்ரேலின் தாக்குதலில் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஒக்டோபர் நவம்பர் மாதங்களில் இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் அவர் தனது குடும்பத்தவர்களை இழந்திருந்தார்.

இஸ்ரேலின் தாக்குதலில்



காயமடைந்த நிலையில் டோஹா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள வர்களை பார்வையிட ஹமாஸ் தலைவர் சென்ற வேளை அவருக்கு அவரின் புதல்வர்கள் கொல்லப்பட்டமை குறித்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

(அ)




# ரஷ்யாவின் உத்தரவை மீறிய கூகுள் நிறுவனம்

## 407 கோடி ரூபாய் அபராதம்!

மொஸ்கோ, ஏப். 12

சர்ச்சைக்குரிய கருத்துக்களை நீக்க மறுத்த குற்றத்திற்காக கூகுள் நிறுவனத்துக்கு சுமார் 407 கோடி ரூபாய் அபராதம் விதித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

ரஷ்யாவில் பயங்கரவாதம் மற்றும் தன்பாலின் ஈர்ப்பு குறித்தான உள்ளடக்கம் கொண்ட தகவல்களை பரப்பும் யு டியூப் வீடியோக்களை நீக்குமாறு கூகுள் நிறுவனத்துக்கு ரஷ்யாவின் மாஸ்கோ நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

எனினும் கூகுல் நிறுவனம் இதனை நீக்க மறுத்துள்ளது.

இந்நிலையில், நாட்டின் சட்டத்திட்டங்களுக்கு புறம்பான தகவல்களை பரப்பி பயங்கரவாதத்தை ஊக்குவிப்பதாக கூகுள் நிறுவனத்தின் மீது மொஸ்கோ நீதிமன்றம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இதனையடுத்தே, சர்ச்சைக்குரிய கருத்துக்களை நீக்க மறுத்தமைக்காக கூகுள் நிறுவனத்துக்கு சுமார் 407 கோடி ரூபாய் (49 மில்லியன் டொலர்) அபராதம் விதித்து உத்தரவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)




# தென்கொரிய தேர்தலில் ஆளும் கட்சி படுதோல்வி

சியோல், ஏப். 12

தென்கொரிய பொதுத்தேர்தலில் ஆளும் கட்சி படுதோல்வியடைந்துள்ளது.

எதிர்கட்சியான ஜனநாயக கட்சி பெரும் வெற்றியை பெற்றுள்ளது.

300 ஆசனங்களிற்கான தேர்தலில் எதிர்கட்சியான ஜனநாயக கட்சியும் சிறிய கட்சிகளும் இணைந்து 192 ஆசனங்களை கைப்பற்றியுள்ளன.

இந்த தேர்தல் ஜனாதிபதி யூன் சுக் இயோலின் ஆட்சி குறித்த சர்வஜனவாக்கெடுப்பாக கருதப்பட்டது. தேர்தல் முடிவுகளை தொடர்ந்து அவரது கட்சி தலைவர் பதவியை இராஜினாமா செய்துள்ளார் பிரதமரும் பதவியை இராஜினாமா செய்யப்போவதாக அறிவித்துள்ளார்.

(அ)

# விபத்தில் சிக்கிய பாடசாலை பஸ்!

## 6 சிறுவர்கள் உயிரிழப்பு

புதுடில்லி, ஏப். 12

பாலர் பாடசாலை மாணவர்களை ஏற்றிச்சென்ற பஸ்ஸொன்று விபத்தில் சிக்கியதில், 6 சிறுவர்கள் உயிரிழந்துள்ள சோக சம்பவமொன்று நேற்று காலை ஹரியானாவில் பதிவாகியுள்ளது.

ஹரியாணா மாநிலம் நர்னால் பகுதிக்கருகில் உள்ள கிராமத்திலுள்ள மாணவர்களை ஏற்றிச்சென்ற பஸ்ஸொன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் பஸ்ஸில் பயணித்த 6 சிறுவர்கள் பரிதாபமாக உயிரிழந்துள்ளதுடன், 12 க்கும் மேற்பட்ட சிறுவர்கள் படுகாயமடைந்துள்ளதாக கூறப்படுகின்றது.

ஜி.எல் பப்ளிக் பாடசாலைக்கு மாணவர்களை ஏற்றுக் கொண்டுச் சென்ற குறித்த பாடசாலை பஸ், கனினாவின் உன்ஹானி கிராமத்துக்கருகில்




விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தின்போது பஸ்ஸின் சாரதி குடிபோதையில் இருந்தாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலும், ரம்ழான் தினமான நேற்று விடுமுறை அளிக்காமல், பாடசாலை நடத்தப்பட்டமை குறித்தும், பாடசாலை நிர்வாகத்தின் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில், விபத்துக்குள்ளான பாடசாலை பஸ்ஸின் தகுதிச்சான்றிதழ் 2018 ஆம் ஆண்டே காலாவதியாகிவிட்டதாக ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


(அ)

# அசஞ்சே மீதான குற்றச்சாட்டுகளை கைவிட தயாராகின்றது அமெரிக்கா?

நியூயோர்க்,, ஏப். 12

விக்கிலீக்ஸ் இணை ஸ்தாபகர் ஜூலியன் அசஞ்சேயிற்கு எதிராக குற்றச்சாட்டுகளை கைவிட வேண்டும் என்ற அவுஸ்திரேலியாவின் வேண்டுகோளை பரிசீலித்துவருவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் இரகசிய தகவல்களை அம்பலப்படுத்திய மைக்காக விக்கிலீக்ஸ் இணை ஸ்தாபகருக்கு எதிராக வழக்கு



தொடர்வது குறித்து அமெரிக்கா கடந்த ஒரு தசாப்தகாலமாக தீவிர கவனம் செலுத்திவருகின்றது.

பிரிட்டனின் சிறையிலிருந்து அமெரிக்காவிற்கு நாடு கடத்தப்படுவதை எதிர்நோக்கியுள்ள அவுஸ்திரேலிய பிரஜையான ஜூலியன் அசஞ்சேயிற்கு எதிராக குற்றச்சாட்டுகளை சுமத்துவதை கைவிட வேண்டும் என அவுஸ்திரேலியாதொடர்ந்து வேண்டுகோள் விடுத்து வருகின்றது.

இந்த நிலையில் இதுகுறித்த கேள்விக்கு பதில் அளித்துள்ள ஜோ பைடன் அவுஸ்திரேலியாவின் வேண்டுகோளை பரிசீலித்து வருவதாக தெரிவித்துள்ளார்.

பைடன் நிர்வாகம் ஜூலியன் அசஞ்சேயை விசாரணைக்கு உட்படுத்துவதை கைவிட தயாராகின்றது என்பதற்கான அறிகுறிகள் தொடர்ந்து வெளியாகி வருகின்றன எனினும் இது ஜனாதிபதி தேர்தலில் பைடனிற்கு பாதிப்பை ஏற்படுத்தலாம்.

ஜூலியன் அசஞ்சே இரகசிய ஆவணங்களை தவறாக கையாண்டதை ஏற்றுக்கொண்டால் அவர் முன்கூட்டியே விடுதலை செய்யப்படலாம் என வோல்ஸ்ரீட் ஜேர்னல் சில நாட்களிற்கு முன்னர் செய்தி வெளியிட்டிருந்தது.

ஜூலியன் அசஞ்சே பிரிட்டன் சிறையில் அடைக்கப்பட்டு ஐந்து வருடங்களாகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# உளுந்துக் கொள்வனவில் விவசாயிகளிடம் மோசடி!

## பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

வவுனியா, ஏப். 12

**வவுனியாவில் தனியார் நிறுவனமொன்று விவசாயிகளிடம் இருந்து 20 இலட்சம் ரூபாய் பெறுமதியான உளுந்தைக் கொள்வனவு செய்துவிட்டு பணத்தை கொடுக்காமல் மோசடி செய்துள்ளதாகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.**

வவுனியா தாலிக்குளம் பகுதியைச் சேர்ந்த எட்டு விவசாயிகளே இவ்வாறு ஏமாற்றப்பட்டுள்ளனர் எனவும் அவர்களிடமிருந்து 20,000 கிலோகிராம் உளுந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் இது குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ள போதும் பொலிஸார் இது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுக்காமல் அசமந்தப் போக்குடன் செயற்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இதனால் தாம் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்துவருவதாகவும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (அ)

# 23 வயது யுவதி மர்ம மரணம்!

கொழும்பு, ஏப். 12

அவிசாவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மனமேந்திர மாவத்தையில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த யுவதி ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்தார்.

நேற்று முன் தினம் மாலை குறித்த விடுதியில் தங்கியிருந்த ஜோடியில் பெண் ஒருவர் சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்தமை தொடர்பில் முறைப்பாடு கிடைத்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

வலப்பனை பிரதேசத்தை சேர்ந்த 23 வயதுடைய யுவதி ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்த யுவதி நேற்று முன் தினம் மாலை நபர் ஒருவருடன் ஹோட்டலுக்கு வந்து அங்குள்ள அறையில் தங்கியிருந்த நிலையில், சிறிது நேரத்தில் யுவதி மயங்கி விழுந்துள்ளதாக உடன் இருந்த நபர் ஹோட்டல் நிர்வாகத்திற்கு தெரிவித்துள்ளார்.

இதையடுத்து வழங்கிய தகவலை அடுத்து பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்தனர்.

சடலம் சம்பவம் இடம்பெற்ற இடத்தில் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதுடன், அவிசாவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# வாகன இறக்குமதி தடை 2025 இல் தளர்த்தப்படும்!

கொழும்பு, ஏப். 12

வாகன இறக்குமதி மீதான தடைகள் எதிர்வரும் 2025 இல் கட்டம் கட்டமாக தளர்த்தப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

தெமட்டகொடவில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த இவர் இதனைத் கூறினார்.

தற்போது சுற்றுலாத்துறைக்காக பேருந்துகள் மற்றும் சிறிய ரக பேருந்துகளின் இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.



கடந்த 2 வருடங்களாக பொருளாதார நெருக்கடிக் காலங்களில் விதிக்கப்பட்டிருந்த பல கட்டுப்பாடுகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தளர்த்தியுள்ளதாக சியம்பலாபிட்டிய சுட்டிக்காட்டினார். (அ)

# புத்தாண்டு தள்ளுபடி தொடர்பில் மிகவும் அவதானமாக இருங்கள்!

## நுகர்வோர் விவகார அதிகார சபை கோரிக்கை

கொழும்பு, ஏப். 12

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு சந்தையில் காணப்படும் புத்தாண்டு தள்ளுபடிகள் மூலம் பொருட்களை கொள்வனவு செய்யும் போது மிகவும் அவதானமாக இருக்குமாறு நுகர்வோர் விவகார அதிகார சபை கேட்டுள்ளது.

இந்நாட்களில் ஆடைகள் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களை கொள்வனவு செய்வதில் நுகர்வோர் அதிக ஆர்வம் காட்டுவதால், தள்ளுபடிகள் மூலம் பொருட்களை கொள்வனவு தொடர்பில் கவனம் செலுத்த வேண்டுமென நுகர்வோர் அதிகாரசபையின் விசேட சோதனை மற்றும் விசாரணைகளின் பணிப்பாளர் சஞ்சய் வீரசிங்க தெரிவித்தார்.

இவ்வாறான பண்டிகைக் காலங்களில் தள்ளுபடி பொருட்களில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், விலையில் உள்ள வேறுபாட்டைக் கருத்தில் கொண்டு, தள்ளுபடி செய்யப்பட்ட பொருட்களின் தரம் குறித்தும் சிந்திக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு கொள்வனவு செய்யப்படும் எந்தவொரு பொருளுக்கும் பிரச்னை ஏற்பட்டால், ஆதாரங்களுடன் நுகர்வோர் விவகார அதிகாரசபைக்கு எழுத்துப்பூர்வமாக முறைப்பாடு செய்ய வேண்டுமென அவர் குறிப்பிட்டார். (அ)

# சஜித் பிரேமதாச ஆட்சியில் திருடர்களுக்கு இடமில்லை!

## நளின் பண்டார கூறுகிறார்

கொழும்பு, ஏப். 12

எதிர்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாசவின் ஆட்சியில் திருடர்களுக்கு இடமில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்

எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐக்கிய மக்கள் சக்தியின் பலத்தை எவராலும் பறித்துவிட முடியாது. ஆனால் திறன் வாய்ந்தவர்களால் எமது கட்சி



யில் முன்னணிக்கு வரமுடியும். அவர்களால் முன்னிலைக்கு வர முடியும். அதற்கான வாய்ப்பு உள்ளது.

சுதந்திர மக்கள் சபையினை சேர்ந்தவர்களின் பலமும் எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. அதனையும் இணைத்துக்கொண்டு ஆட்சியமைக்க எதிர்பார்த்துள்ளோம். சரியான பாதைக்கு நாட்டை இட்டுச்செல்வதே எம்முடைய நோக்கதாகும். எதிர்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாசவுடன் விளையாட முடியாது. அவருடைய ஆட்சியில் திருடர்களுக்கு இடமில்லை.

அதேபோன்று சஜித் பிரேமதாச அநுரகுமார திசாநாயக்கவை பார்த்து அஞ்சவில்லை. அவருடன் திறந்த விவாதத்திற்கு செல்லத் தயார்-என்றார். (அ)

# மாடுகளை ஏற்றிச்சென்ற லொறி மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம்!

## ஒருவர் படுகாயம் !!

கொழும்பு, ஏப். 12

மாத்தறை - கனங்கே - தொலேலியத்த பகுதியில் உத்தரவை மீறிச் சென்ற லொறி மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

மாடுகளை ஏற்றிச் சென்ற லொறி மீதே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை 4.30 மணியளவில் கனங்கே ரஜமஹா விகாரைக்கு அருகில் மாடுகளை லொறியில் ஏற்றிச் செல்வதை அவதானித்த இரவு நேர கண்காணிப்பு பொலிஸ் குழுவொன்று, லொறியை தொலேலியத்த பிரதேசத்தில் நிறுத்துமாறு உத்தரவிட்டுள்ளது.

இருப்பினும், லொறி அதனை மீறி தொடர்ந்து பயணித்ததால், பொலிஸார் வாகனத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியுள்ளனர்.

இதில் லொறியில் இருந்த ஒருவர் படுகாயம் அடைந்ததுடன் மேலும் இருவர் தப்பிச் சென்றுள்ளனர்.

கிங்தோட்டை, மாபுகல பகுதியைச் சேர்ந்த ஒருவரே துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்துள்ளார்.

சந்தேகநபர் தற்போது சிகிச்சைக்காக கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# 9 வயதுச் சிறுவன் ரயில் மோதி சாவு!

கொழும்பு, ஏப். 12

மொறட்டுவை - முரவத்த ரயில் கடவைக்கு அருகில் சைக்கிளில் விளையாடிக் கொண்டிருந்த 9 வயதுச் சிறுவன் ரயில் மோதி உயிரிழந்துள்ளதாக மொறட்டுவை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் மொறட்டுவை பிரதேசத்தைச் சேர்ந்த 9 வயதுடைய எம்.ஆர் .ரந்தரு என்ற சிறுவனாவார். (அ)

# போலிக் கடவுச்சீட்டில் மலேசியா செல்ல முயன்றவர் விமான நிலையத்தில் கைது!

கொழும்பு, ஏப். 12

போலி கடவுச்சீட்டைப் பயன்படுத்தி மலேசியாவிற்குத் தப்பிச் செல்ல முயன்ற இலங்கையர் ஒருவர் குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளால் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டார்.

இவர் யாழ்ப்பாணம் சண்டிலிப்பாயில் வசிக்கும் 34 வயதுடையவர் எனவும் இவருக்கு எதிராக பயணத் தடை விதிக்கப்பட்டிருந்ததாகவும் தெரிய வந்துள்ளது.

குறித்த நபர் அவரது கடவுச்சீட்டிலுள்ள தகவல்களை மாற்றி போலி கடவுச்சீட்டைப் பயன்படுத்தி கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து மலேசியாவின் கோலாலம்பூருக்குச் செல்ல தயாராக இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் இவர் கைது செய்யப்பட்டு குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இவருக்கு எதிராக ஏற்கனவே பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது. (அ)

## 3 மற்றும்...

சேர்க்கப்பட்டிருந்தார். இதேசமயம், 3 வயதேயான சிறுமியும் வேதனையால் அழுதநிலையில் உறவினர்களால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சிறுமியை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டமையை அவதானித்து பொலிஸாருக்கு தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து சிறுமியிடமும் சிறுவனிடமும் பொலிஸார் வாக்குமூலம் பெற்றனர். அதில், இருவரையும் அவர்களின் தந்தையே பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கியமை தெரிய வந்தது. இதையடுத்து, 28 வயதான அவர்களின் தந்தை கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபர் கந்தளாய் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட சிறுவர்கள் இருவரும் திருகோணமலை பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஐ)

## பெரமுனவின்...

முடிவுகள் எடுக்கப்படுகின்றன. எங்கள் கட்சி ஒரு நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது.

இந்த நாட்டில் கட்சிகளின் கொள்கைகள் காலத்துக்குக் காலம் நவீனமயமாக்கப்பட்டு வருகின்றன. மக்கள் விடுதலை முன்னணியும் நவீனமயமாக முயற்சிக்கிறது.

இந்தியா, கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு அநுரகுமார திஸநாயக்க சென்றார். அப்போது, இந்திய விஸ்தரிப்புவாதத்தை எதிர்த்து எத்தனை போராட்டங்கள் நடத்தினார்கள்? அவை அனைத்தும் இன்று சில மாற்றங்களுக்கான தொடக்கத்தில் உள்ளன. மக்கள் தெரிவு செய்ய பல விருப்பங்கள் உள்ளன. மக்கள் அவர்களில் சிறந்த விருப்பத்தைத் தேர்ந்தெடுப்பார்கள். -என்றார் நாமல்.

இதேசமயம், ரணில் விக்கிரமசிங்க தங்கள் கட்சியின் வேட்பாளர் பட்டியலில் இல்லை என்று அந்தக் கட்சியின் முக்கியஸ்தர்கள் கூறிவரும் நிலையில் நாமல் மேற்கண்ட கருத்தை வெளியிட்டுள்ளார். (ஐ-எ)

## 4 வயதில்...

லையின் முதலாம் ஆண் டுக்கு முன்னர் நான்கு வய தில் முன்பள்ளி கற்பது கட்டாயமாக்கப்படும் என்றும் அவர் தெரிவித் தார். (ஐ)

## இலங்கை...

பொருளாதாரத்தில் 2.5 வீத வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டின் பொருளாதாரம் 2023 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து மீண்டு வருவதற்கான அறிகுறிகளைக் காட்டிய நிலையில், நெருக்கடி நிலைமை மற்றும் பணவீக்கம் இப்போது ஒற்றை இலக்கத்துக்கு குறைந்துள்ளதாக ஆசிய அபிவிருத்தி வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு மற்றும் வெளிநாட்டு பண அனுப்பல்கள் பாராட்டத்தக்க நிலையிலுள்ளது.

கடினமான சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தும் வகையில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றம் பாராட்டுக்குரியது என ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பிரதிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (எ)

## தொழில்நுட்ப...

அதற்கு கமெராக்கள், தகவல்தொழில்நுட்பம், ட்ரோன் தொழில்நுட்பம் போன்றவற்றைப் பயன்படுத்தலாம்.

கடந்த காலத்தில், ஒரு சிப்பாய் ஒரு குறிப்பிட்ட வரம்பை எதிர்நோக்குகிறார். ஆனால், ஒரே நேரத்தில் சுமார் 5 கிலோ மீற்றர் தூரம் வரை நாம் ட்ரோனைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

நாங்கள் மிகவும் எளிமையான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி எங்கள் படைகளின் அளவைக் குறைக்கப் பார்க்கிறோம். மேலும் நாங்கள் தொழில்நுட்பத்தில் முன்னேறி வருகிறோம். அப்போது 35 ஆயிரம் படையினரை வைத்து முன்னெடுத்த நடவடிக்கையை தற்போது 18 ஆயிரம் பேரை வைத்து தொழில்நுட்பம் ஊடாக மேற்கொள்ள எதிர்பார்ப்பார்க்கிறோம் - என்றார். (ஐ)

# வெடுக்குநாறிமலை விவகாரம் குறித்து சர்வதேச கண்காணிப்புக்குழு ஆராய்வு



கொழும்பு, ஏப். 12

வெடுக்குநாறிமலை மற்றும் குருந்தூர்மலை விவகாரம் தொடர்பில் சர்வதேச நெருக்கடி கண்காணிப்புக் குழுவின் ஆய்வாளர் அலன் கீனன் ஆராய்ந்துள் ளார்.

வவுனியா - வெடுக்குநாறிமலையிலுள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் கடந்த மார்ச் மாதம் 8 ஆம் திகதி சிவராத்திரி தினத்தன்று பூஜை வழிபாடு களில் ஈடுபடச்சென்ற பக்தர்களுக்கு பொலிஸாரால் இடையூறு விளைவிக்கப்பட்டதுடன், இரவு வேளையில் அங்கு வழிபாடுகளைத் தொடர முற்பட்டோர் அங்கிருந்து வலுகட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். அதுமாத்திரமன்றி ஆலயப்பூசகர் உள்ளடங்கலாக 8 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நடைபெற்று சில தினங்கள் கடந்ததன் பின்னர், நாட்டில் தேசிய தேர்தல்கள் நடைபெறவுள்ள பின்னணியில் அரசியல் மற்றும் மனித உரிமைகள் கள நிலைவரம் தொடர்பில் ஆராயும் நோக்கில் இலங்கைக்கு வருகைதந்த சர்வதேச நெருக்கடி கண்காணிப்புக்குழுவின் ஆய்வாளர் அலன் கீனன், வெடுக்குநாறிமலை மற்றும் குருந்தூர்மலை பகுதிகளுக்கு நேரடியாகச்சென்று பார்வையிட்டதாகவும், அங்கு சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டதாகவும் அறியமுடிகின்றது.

அதுமாத்திரமன்றி மட்டக்களப்பு மயிலத்தமடு, மாதவனை பண்ணையாளர்கள் விவகாரம் பற்றியும் அலன் கீனன், பரந்துபட்ட ரீதியில் ஆராய்ந்துள்ளார் என அறியவந்துள்ளது. (எ)

## இந்திய...

யாராவது வசிக்கிறார்களா? என காங்கிரஸ் கேள்வி எழுப்புகிறது. யாரும் வசிக்காத இடம் என்றால், அதனை கொடுத்துவிட காங்கிரஸ் துணியும் என அர்த்தமா? ராஜஸ்தானில் பாலைவனம் உள்ளது. இது குறித்து காங்கிரஸ் என்ன சொல்லப் போகிறது? இதற்கு யாராவது உரிமை கோரினால் காங்கிரஸ் என்ன சொல்லும்?

நாட்டுக்கு சேவை செய்வது இதுதானா? இதுதான் காங்கிரஸின் மனநிலை. நாட்டில் மக்கள் வசிக்காத இடத்தைப் பொறுத்தவரை, அது அவர்களுக்கு ஒரு துண்டு நிலம். ராஜஸ்தானின் இடத்தைக் கூட அவர்கள் அப்படியே விட்டுக் கொடுக்கலாம்.

ஜம்மு காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து அளித்து வந்த சட்டப்பிரிவு 370 இரத்து செய்யப்பட்டது குறித்து பிரதமர் மோடி ஏன் ராஜஸ்தானில் பேசுகிறார் என காங்கிரஸ் தலைவர்கள் சிலர் கேள்வி எழுப்புகின்றனர். ராஜஸ்தானுக்கும் ஜம்மு காஷ்மீருக்கும் இடையே உள்ள தொடர்பு ஆழமானது. ஜம்மு காஷ்மீருக்காக தங்கள் உயிரைக் கொடுத்த ராஜஸ்தானில் உள்ள தியாகிகளின் கிராமங்களுக்குச் செல்லுங்கள். அப்போது தெரியும், ராஜஸ்தானுக்கும் ஜம்மு காஷ்மீருக்கும் உள்ள தொடர்பு என்ன என்பது.

காங்கிரஸின் சிந்தனையும் செயல்முறையும் மிகவும் குறுகிவிட்டது. எதிர்க்கட்சியாக இருக்கும்போது இப்படி பேசுபவர்கள், ஆட்சிக்கு வந்தால் இந்தியாவின் பாதுகாப்பை என்ன செய்ய முடியும் என்று கற்பனை செய்து பாருங்கள் என்று பிரதமர் மோடி மேலும் தெரிவித்தார். (எ)

## புலம்பெயர்...

நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிக்கும் பணிகள் அரசாங்கத்தால் தீவிரமாக முன்னெடுக்கப்படுவரும் நிலையில், அதற்குரிய பூர்வாங்க நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் விதமாக கலாநிதி அசங்க குணவங்ச தலைமையில் இயங்கிவரும் உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறையின் இடைக்கால செயலக அதிகாரிகள் அண்மையில் வட, கிழக்கு மாகாணங்களுக்கு வருகைதந்து பல்வேறு தரப்பினருடன் சந்திப்புகளை நடத்தியிருந்தனர்.

இதேபோன்று தெற்கிலும், குறிப்பாக கொழும்பைத் தளமாகக்கொண்டு இயங்கிவரும் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் புத்திஜீவிகளை சந்தித்து உத்தேச உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பில் கலந்துரையாடல்களை முன்னெடுத்திருந்தனர்.

அதேபோன்று வடக்கு, கிழக்கிலுள்ள வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள், போரால் உருவான விதவைகள், முன்னாள் போராளிகள் உள்ளடங்கலாகப் போரினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட தரப்பினர் பற்றிய தகவல்களை மாவட்ட செயலகம், பிரதேச செயலகம், காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய அலுவலகம், அரச சார்பற்ற அமைப்புகளின் செயலகம், மக்கள் பேரவை போன்ற கட்டமைப்புகளின் ஊடாகத் திரட்டிவருவதாகவும், அவர்களுடனான முறையாக ஒருங்கிணைக்கப்பட்ட சந்திப்புக்கள் இம்மாதம் ஆரம்பமாகும் எனவும் இடைக்கால செயலகத்தின் கொள்கைப்பிரிவு தலைவர் யுவி தங்கராஜா தெரிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் தற்போது லண்டன் சென்றிருக்கும் யுவி தங்கராஜா, எதிர்வரும் வார தொடக்கத்தில் பாரிஸிலும், 19 மற்றும் 20ஆம் திகதி வார இறுதி நாட்களில் லண்டனிலும் புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களை சந்திக்கவுள்ளார். இச்சந்திப்புகளில் தமிழ், சிங்கள, முஸ்லிம்கள் என மூவினங்களைச்சேர்ந்த இலங்கையர்களும் உள்வாங்கப்படவுள்ளனர்.

அவர்களுக்கு உத்தேச உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டமூலம் மற்றும் அதன்கீழ் ஸ்தாபிப்பதற்குத் திட்டமிட்டிருக்கும் ஆணைக்குழு என்பன தொடர்பில் விளக்கமளிக்கவுள்ள யுவி தங்கராஜா, அவர்களது சந்தேகங்கள் மற்றும் கேள்விகளுக்கும் பதிலளிக்கவுள்ளார்.

“இதற்கு முன்னர் இலங்கையில் இயங்கிய ஆணைக்குழுக்களைப் பொறுத்தமட்டில், அவற்றில் புலம்பெயர் தமிழர்களோ அல்லது இலங்கையர்களோ பெரும்பாலும் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை.

ஆனால் உள்நாட்டு யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் புலம்பெயர்ந்து சென்ற இலட்சக்கணக்கானோர் உலகம் முழுவதும் பரந்து வாழ்கின்றனர்.

எனவே, உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவில் முறைப்பாடளிப்பதற்கோ அல்லது அச்செயன்முறையில் பங்கேற்பதற்கோ புலம்பெயர் இலங்கையர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும். அதன் ஓரங்கமாகவே இந்தச் சந்திப்புகளை நடத்துவதற்கு உத்தேசித்திருக்கின்றோம்” என யுவி தங்கராஜா தெரிவித்தார். (ஐ)

## புலிகளின்...

அகழ்வுக்கு எதிராக தொடர் போராட்டம் நடைபெறுகிறது. இந்த நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை அங்கு நிலைமையை ஆராய அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா சென்றிருந்தார். அங்கு போராட்டக்கார் களுடன் பேச்சில் ஈடுபட்டபோது முரண்பாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து அங்கிருந்து அவர் வெளியேறினார் என்று கூறப்படுகின்றது. இந்த நிலையில் இது தொடர்பில் விளக்கமளிக்கும் செய்தியாளர் சந்திப்பை நேற்று தனது கட்சி தலைமையகத்தில் நடத்தினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், சுண்ணக்கல் அகழ்வில் சாதக, பாதக தன்மை தொடர்பில் ஆராய சென்றபோது அங்கிருந்தவர்கள் யாரும் கதைக்கக்கூடிய நிலையில் இருந்திருக்கவில்லை. சிலர் தமது அரசியலுக்காக வந்தார்கள். மற்றையவர்கள் போதையில் நின்றார்கள். அவர்களுடன் கதைக்க முடியாது எனத் திரும்பி வந்தேன். மீண்டும் செல்வேன். மக்களின் வாழ்வாதரத்துக்காக தொடர்ந்து பயணிப்பேன்.

பொன்னாவெளி பகுதியில் ஆய்வின் முடிவில் சுண்ணக்கல் அகழ்வால் மக்களுக்குப் பாதிப்பு வருமென ஆய்வறிக்கை கிடைக்கப்பெற்றால் அகழ்வுப் பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட மாட்டாது. மக்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை என ஆய்வறிக்கை கிடைத்தால், அகழ்வுப் பணிகளுக்கான நடவடிக்கைகள் அசுர வேகத்தில் முன்னெடுக்கப்படும் - என்றும் கூறினார். (ஐ-எ)

## தடையின்றி...

எடுக்கப்பட்டுள்ளன என்று இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

நாட்டின் எரிபொருள் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக பிரதான முனையங்கள் மூலம் எரிபொருள் இருப்புக்களை இறக்குமதி செய்து, குதங்களில் போதுமான இருப்புக்களைப் பராமரிக்க நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், எரிபொருள் இருப்பை பராமரிப்பது தொடர்பாக அனைத்து எரிபொருள் நிலைய உரிமையாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விநியோகஸ்தர்கள் எரிபொருளை வாங்குவதற்கு எளிதாக்கும் வகையில் காசோலை மூலம் பரிவர்த்தனை செய்ய எதிர்வரும் 15 ஆம் திகதி வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் எரிபொருள் விநியோக நடவடிக்கைகளுக்காக போதுமான பெற்றோலிய சேமிப்பை வைத்துக்கொள்ள அந்த நிறுவனம் தீர்மானித்துள்ளதாக பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. (எ)

ஈழநாடு
Eelanadu

# தொழில்சங்க நடவடிக்கைக்கு நாங்கள் தயாராகி வருகிறோம்

## இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்



கொழும்பு, ஏப். 12

**தொழிற்சங்க ரீதியாக சம்பள நிர்ணய சபையுடன் மேற்கொண்ட பேச்சில் இணக்கப்பாடு இன்மையால் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தொழில்சங்க நடவடிக்கைக்கு தயாராகி வருவதாக கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.**

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைமையகமான சௌமிய பவனில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

நேற்று (நேற்றுமுன்தினம்) நடந்த சம்பள பேச்சின் போது தொழிலாளர்கள் தரப்பில் சார்பில் நாங்கள் சென்றோம். அதே சமயம் கம்பனி சார்பாக முதலாளிகள் சமுகமளிக்கவில்லை. பொதுவாக கூட்டு ஒப்பந்தம் மூல மாகத்தான் சம்பள பேச்சு நடைபெற்றது.

ஆனால், கூட்டு ஒப்பந்தத்தில் காலங்கள் தாமதமான தால் தொழில் அமைச்சுக்கு செல்லக்கூடியதாக இருந்தது. தொழில் அமைச்சுதான் நடுநிலைமையானது. அதிலும் கம்பனிகள் செயல்படுகிறார்கள் என்பதனால் தொழில் சங்க நடவடிக்கை எடுப்பது தவிர வேறு எந்த வழிகளும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு கிடையாது. எதிர்வரும் காலங்களில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உயர் மட்டம் கூடி அடுத்த கட்ட நடவடிக்கையாக தொழில் சங்க நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாக தீர்மானித்துள்ளது - என்றார்.

(ஐ)

# சீனாவுடன் இணைந்து இலங்கை ஆய்வகம் ஒன்றை நிறுவ முடிவு!

கொழும்பு, ஏப். 12

பசுமை தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு தொழில்நுட்பங்களை பிரபலப்படுத்துதல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு சீனாவுடன் இணைந்து இலங்கை, ஆய்வகம் ஒன்றை நிறுவுவதற்கு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, கிருமிநாசினி பாவனையை குறைத்தல், தேயிலை தோட்டத்திற்கான உயிரியல் கட்டுப்பாட்டு தொழில்நுட்பம், தேயிலை கிருமிநாசினி எச்சங்களை இலக்காகக் கொண்ட இடர் கண்காணிப்பு ஆகியவற்றைக் கொண்டு அந்த ஆய்வகம் நிறுவப்படவுள்ளதாக சீன ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த முயற்சிகளின் மூலம், தேயிலை பயிர்ச்செய்கையில் சிறந்த விளைச்சலைப் பெற முடியும் என எதிர்பார்க்கப்படுவதாக குறிப்பிடப்படுகின்றது. (அ)

# சாவகச்சேரியில் திருட்டுப்போன மோ. சைக்கிள் மன்னாரில் மீட்பு!

தென்மராட்சி, ஏப். 12

சாவகச்சேரியில் கடந்த திங்கட்கிழமை திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் சாவகச்சேரி பொலிஸாரின் துரித முயற்சியால் மன்னாரில் வைத்து மீட்கப்பட்டது.

சாவகச்சேரி நகரத்திலுள்ள மருத்துவ நிலையத்தில் சிகிச்சை பெறச் சென்ற ஒருவர் தனது மோட்டார் சைக்கிளை அங்கு நிறுத்தி விட்டு சென்றுள்ளார். அவர், திரும்பிவந்து பார்த்த போது அவரது மோட்டார் சைக்கிள் திருடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக, அவர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

விரைந்து செயல்பட்ட பொலிஸார் ஏனைய பொலிஸ் நிலையங்களுக்கும் சோதனை சாவடிகளுக்கும் தகவல் அளித்தனர்.

இதையடுத்து, மன்னார் சோதனை சாவடியில் வைத்து மோட்டார் சைக்கிள் கண்டுபிடிக்கப்பட்டது. அதை செலுத்திச் சென்ற சந்தேகநபரும் கைது செய்யப்பட்டார். (ஐ)

# நாடு முழுவதும் தீவிர பாதுகாப்பு

கொழும்பு, ஏப். 12

இலங்கைத் தீவு முழுவதும் புத்தாண்டை முன்னிட்டு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

பெருநகரங்கள், நகரங்கள், சிறிய நகரங்கள் மற்றும் மக்கள் குழுமும் இடங்களாக அடையாளப்படுத் தப்பட்டுள்ள அனைத்து இடங்களிலும் பாதுகாப்பு பலப்படுத் தப்பட்டுள்ளது.

மக்கள் எவ்வித இடையூறுகளுமின்றி புத்தாண்டை வரவேற்க பாதுகாப்பு தரப்பில் இருந்து வழங்க வேண்டிய அனைத்து ஒத்துழைப்புகளும் வழங்கப் பட்டுள்ள தாக அரசாங்கம் கூறியுள்ளது.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன்,

உலகளவில் தீவிரவாத மற்றும் பயங்கரவாத தாக்குதல்கள் அடிக்கடி எதிர்பாராத விதமாக நிகழ்கின்றன. இது விழிப்புணர்வின் அவசியத்தை அடிக்கோடிட்டுக் காட் டுகிறது.

பொது அமைதியின்மையை தூண்டும் வகையில் அரசியல், மத மற்றும் கலாசார அம்சங்களின் மீது தாக்குதல் நடத்த சிலர் முயற்சிக்கின்றனர்.

இதனால் எதிர்வரும் தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டு கொண்டாட்டங்களை கருத்திற் கொண்டு நாடு முழுவ தும் பாதுகாப்பு பலப்படுத் தப்பட்டுள்ளது.

7,500 க்கும் மேற்பட்ட பாதுகாப்புப் பணியாளர்கள் கடமையில் ஈடுபட்டுள்ளனர்-என்றார். (அ)

# இளைஞனை தாக்கிய பொலிஸார் மறியலில்

மதவாச்சி, ஏப். 12

மதவாச்சி பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிலரால் இளைஞன்மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இதன்படி, மதவாச்சி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்களே எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரும் நேற்று கெப்பிட்டிகொல்லாவ நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மதவாச்சி பொலிஸ் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் தனது மகனின் விதைப்பை சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்பட்டதாக அவரது தாய் குற்றம் சாட்டிய சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதுதொடர்பில் பாதிக்கப்பட்ட இளைஞனிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

காயமடைந்தவர் வழங்கிய வாக்குமூலத்தின் பிரகாரம் அநுராதபுரம் மருத்துவமனை பொலிஸார் கெப்பிட்டிகொல்லாவ பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு அறிவித்ததன் பின்னர் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ)

# கட்சித் தாவல்களின் ஊடாக எந்த கட்சியும் பலம் பெறாது

## சரித ஹேரத் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஏப். 12

கட்சித் தாவல்களின் ஊடாக எந்த அரசியல் கட்சிகளையும் பலப்படுத்த முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் சரித்த ஹேரத் குறிப்பிட்டார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதார நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்கான வேலைத்திட்டமே இந்த நாட்டிற்கு தற்போது அவசியமாகின்றது.

அரச செலவீனத்தை முகாமைத்துவம் செய்வதற்கான நுட்பமே நமக்கு தேவைப்படுகின்றது.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதாக கூறி தற்போதைய அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டங்களையே நடைமுறைப்படுத்துகின்றது.

இதனூடாக கடன் செலுத்தும் நடவடிக்கையை மாத்திரம் மேற்கொள்ளவுள்ளனர்-என்றார். (அ)

# மியன்மாரில் சிறை மீட்கப்பட்ட இலங்கையர் விரைவில் நாட்டுக்கு

## வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஏப். 12

மியன்மாரின் மியவடி பகுதியிலிருந்து மீட்கப்பட்ட 8 இலங்கையர்கள் பாங்கொக்கில் உள்ள இலங்கை தூதரக அதிகாரிகளால் வியாழக்கிழமை பொறுப்பேற்கப்பட்டனர். அவர்கள் வெகுவிரைவில் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படுவர் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

“மியன்மாரின் மியவடி பகுதியிலிருந்து கடந்த மார்ச் 4 ஆம் திகதி மியன்மார் நாட்டு அதிகாரிகளால் மீட்கப்பட்ட இலங்கையர்கள் அந்த அதிகாரிகளின் பாதுகாப்பின்கீழ் தங்கவைக்கப்பட்டிருந்தனர். அதனைத்தொடர்ந்து அவர்கள் தாய்லாந்தின் மியோஸோற் அழைத்துச்செல்லப்பட்டு, தாய்லாந்து குடியகல்வு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். தற்போது அவர்கள் பாங்கொக்கில் உள்ள இலங்கை தூதரக அதிகாரிகளின் பாதுகாப்பில் உள்ளனர்“ என வெளிவிவகார அமைச்சு இதுபற்றி விளக்கமளித்துள்ளது.

அதேவேளை மியன்மார் அதிகாரிகளால் மீட்கப்பட்ட இலங்கையர்களை இலங்கைக்கு அழைத்துவருவது தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மியன்மார் மற்றும் தாய்லாந்து நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுடன் கலந்துரையாடியிருந்தார்.

அதற்கமைய அவசியமான தேவைப்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டவுடன் பாங்கொக் மற்றும் யாங்கொனில் உள்ள இலங்கை தூதரகங்கள், இலங்கை வெளிவிவகார அமைச்சுடன் இணைந்து மீட்கப்பட்ட இலங்கையர்களை நாட்டுக்குத் திருப்பி அனுப்பி வைக்கத் தயாராக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.04.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இறுதி பந்துவரை பரபரப்பு குஜராத் அசத்தல் வெற்றி




ஜெய்ப்பூர்,ஏப்ரல் 12

ராஜஸ்தான் ராயல்ஸ் மற்றும் குஜராத் ரைட்டன்ஸ் அணிகளுக்கு இடையில் நடந்த மிகவும் பரபரப்பான போட்டியில் ராஜஸ்தானை மூன்று விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி குஜராத் பெற்றிபெற்றது.

நடப்பு ஐ.பி.எல். தொடரின் 24 ஆவது லீக் போட்டி ஜெய்ப்பூர் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற குஜராத் அணி பந்து வீச்சைத் தெரிவு செய்தது.

ராஜஸ்தான் அணிக்காக யஷஸ்வி ஜெய்ஸ்வால் மற்றும் ஜாஸ் பட்லர் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கினர். ஜெய்ஸ்வால் 5 பௌண்டரிகளுடன் 24 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

கடந்த போட்டியில் சதம் அடித்த பட்லரை வெறும் 8 ஓட்டங்களில் ரஷித் கான் ஆட்டமிழக்கச் செய்தார். 3 ஆவது விக்கெட்டுக்கு சிறந்த இணைப்பாட்டத்தை அமைத்த ஆர். ஆர். அணித் தலைவர் சஞ்சு சாம்சன் மற்றும் ரியான் பராக் இணைந்து 130 ஓட்டங்களைக் குவித்தனர்.

இதில் ரியான் பராக் 48 பந்துகளில் 76 ஓட்டங்கள் எடுத்தார். 3 பௌண்டரிகள் மற்றும் 5 சிக்ஸர்களை அவர் விளாசினார். அவரை மோகித் சர்மா 19 ஆவது ஓவரில் வெளியேற்றினார். சஞ்சு சாம்சன் 68 ஓட்டங்கள் எடுத்து இதுவரை ஆட்டமிழக்காமல் இருந்தார். ஹெட்மெயர் 13 ஓட்டங்கள் எடுத்திருந்தார். 20 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட்டுக்கள் இழப்புக்கு ராஜஸ்தான் அணி 196 ஓட்டங்கள் எடுத்தது.

197 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய குஜராத் அணியில் சாய் சுதர்ஷன் மற்றும் அணித் தலைவர் சுப்மன் கில் சிறந்த தொடக்கம் கொடுத்தனர். சுதர்ஷன் 29 பந்துகளில் 35 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது ஆட்டமிழந்தார். மறுமுனையில் 6 பௌண்டரிகள், இரண்டு சிக்ஸர்கள் உள்ளடங்களாக 46 பந்துகளில் 72 ஓட்டங்களைக் குவித்து அதிரடி காட்டினார் சுப்மன் கில். 15 ஆவது ஓவர் வரை தாக்குப் பிடித்த கில், சாஹல் வீசிய பந்தில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

அடுத்து களமிறங்கிய மேத்யூ வேட் மற்றும் அபினவ் மனோகர் ஆகியோர் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்து வெளியேறினர்.

பின்னர் இறங்கிய ராகுல் தெவாட்டியா மற்றும் ஷாருக் கான் இணையால் குஜராத் அணியின் ஆட்டத்தில் சிறிய முன்னேற்றம் தெரிந்தது. 18 ஓவர்கள் முடிவில் 162 ஓட்டங்கள் மட்டுமே எடுத்திருந்த குஜராத் அணியை கடைசி 2 ஓவர்களில் காப்பாற்றினார் ரஷித் கான்.பரபரப்பான இறுதித் தருணத்தில் நான்கு பௌண்டரிகளை அடித்து குஜராத் அணி இரசிகர்களின் நம்பிக்கையை மீட்டெடுத்தார்.

கடைசி ஓவரின் ஐந்தாவது பந்தில் தெவாட்டியா இரண்டாவது ஓட்டமெடுக்க முற்பட்டபோது ஆட்டமிழந்து வெளியேறினார். இதனால், குஜராத் அணியின் தோல்வி உறுதி என்ற நிலை ஏற்பட்டது. இருப்பினும், ரஷித் கான் களத்தில் இருந்ததால் குஜராத் அணி இரசிகர்கள் நம்பிக்கை இழக்கவில்லை.

இந்நிலையில், இறுதிப் பந்தில் ரஷித் கான் அடித்த பௌண்டரியுடன் மூன்று விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணியை வீழ்த்தி குஜராத் அணி வெற்றி பெற்றது. (எ)



## ஆர். ஆர். தோல்வி

# சஞ்சு சாம்சனுக்கு 12 இலட்சம் அபராதம்

ஜெய்ப்பூர், ஏப். 12

ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் குஜராத் - ராஜஸ்தான் அணிகள் மோதின. இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற குஜராத் அணி பந்து வீச்சைத் தெரிவு செய்தது. இதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் அணி, பராக் மற்றும் சாம்சனின் அதிரடியால் 20 ஓவர்களில் மூன்று விக்கெட்டுக்களை மட்டுமே இழந்து 196 ஓட்டங்கள் எடுத்தது.

இதனையடுத்து, களமிறங்கிய குஜராத் அணி, ரஷித் கானின் அதிரடியால் அசத்தல் வெற்றிபெற்றது. இதன் மூலம் நடப்பு ஐ.பி.எல். தொடரில் ராஜஸ்தான் அணி தனது முதல் தோல்வியைப் பதிவு செய்தது.

இந்த போட்டியில் தாமதமாகப் பந்து வீசியதற்காக ராஜஸ்தான் அணித் தலைவர் சஞ்சு சாம்சனுக்கு 12 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (எ)

# மும்பையின் வீரர்கள் வெற்றிக்காக வழிபாடு!

மும்பை, ஏப். 12

வெற்றிக்காக மும்பை இந்தியன்ஸ் அணியினர் வழிபாட்டில் ஈடுபட்ட படங்கள் சமூகவலைத்தளங்களில் பிரபலமாகியுள்ளன.

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரின் 25 ஆவது லீக் போட்டியில் 5 முறை சம்பியனான மும்பை இந்தியன்ஸ் அணியும், றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூாரு அணியும் நேற்று மோதின. இரு அணிகளுக்கும் இடையேயான போட்டி மும்பையிலுள்ள வான்கடே மைதானத்தில் நடைபெற்றது.

இந்நிலையில், போட்டிக்கு முன்னர் மும்பை இந்தியன்ஸ் அணித் தலைவர் ஹர்திக் பாண்டியா மும்பையிலுள்ள சித்தி விநாயகர் கோவிலுக்குச் சென்று வழிபாட்டில் ஈடுபட்டார். அவருடன் இஷான் கிஷன், பியூஸ் சாவ்லா மற்றும் ஹர்திக் பாண்டியாவின் அண்ணன் குர்ணால் பாண்டியா ஆகியோர் வழிபாட்டில் ஈடுபட்டனர். (எ)



# கோலியின் சாதனையை 24 வயதில் முறியடித்த கில்

ஜெய்ப்பூர், ஏப். 12

ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் குஜராத் - ராஜஸ்தான் அணிகள் மோதின. இந்த போட்டியில் குஜராத் அணி இறுதி பந்தில் வெற்றி பெற்றது. அதிகபட்சமாக அணித்தலைவர் சுப்மன் கில் 72 ஓட்டங்கள் எடுத்தார். இதில் 6 பௌண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கும்.

இதன் மூலம் சுப்மன் கில் புதிய சாதனை படைத்துள்ளார். ஐ.பி.எல். தொடரில் மூவாயிரம் ஓட்டங்களை சேர்த்த வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார் சுப்மன் கில். அதேபோன்று, கே.எல். ராகுலுக்கு அடுத்ததாக அதிவேகமாக மூவாயிரம் ஓட்டங்களை எடுத்த வீரர் என்ற சாதனையை படைத்தார்.

கே.எல். ராகுல் 80 போட்டிகளில் மூவாயிரம் ஓட்டங்களைச் சேர்த்த நிலையில், சுப்மன் கில் 94 போட்டிகளில் மூவாயிரம் ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

அதேபோன்று, ஐ.பி.எல். வரலாற்றில் மூவாயிரம் ஓட்டங்களைச் சேர்த்த இளம் வீரர் என்ற புதிய சாதனையையும் படைத்துள்ளார் சுப்மன் கில். 26 வயது 186 நாட்களில் விராட் கோலி மூவாயிரம் ஓட்டங்களைச் சேர்த்ததே சாதனையாக இருந்தது. தற்போது விராட் கோலியின் சாதனையை சுப்மன் கில் 24 வயது 215 நாட்களில் முறியடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)




# ஓய்வுக்கு பின்பும் அசத்தும் மலிங்க



மும்பை, ஏப். 12

நடப்பு ஐ.பி.எல். தொடரில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூாரு அணியுடன் நேற்று வியாழக்கிழமை பலப்பரீட்சை நடத்தியது மும்பை இந்தியன்ஸ் அணி. இந்நிலையில், விக்கெட்களைத் தகர்ப்பது குறித்து பந்து வீச்சாளர்களுக்குப் பாடம் எடுத்துள்ளார் மும்பை அணியின் பந்துவீச்சு பயிற்சியாளர் லசித் மலிங்க.

வான்கடே மைதானத்தில் மும்பை வீரர்கள் தீவிர பயிற்சியில் ஈடுபட்டனர். அப்போது பந்து வீச்சாளர்களுக்கு ஒரு இலக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அதனை மலிங்க மேற்பார்வையிட்டுள்ளார். எதிர்முனையில் வைக்கப்பட்ட ஒரு விக்கெட்டை தகர்க்க வேண்டும் என்பது தான் அந்த இலக்கு. அதை அர்ஜூன் டெண்டுல்கர் உள்ளிட்ட மும்பை பந்துவீச்சாளர்கள் செய்யத் தவறியுள்ளனர்.

இந்நிலையில், அந்த பணியை எப்படி வெற்றிகரமாக செய்வது என மலிங்க செய்து காட்டியுள்ளார். பந்து வீசி எதிரே இருந்த ஒற்றை விக்கெட்டை தகர்த்துள்ளார். அந்த காணொலி மும்பை இந்தியன்ஸ் அணி சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ளது. அதில் லசித் மலிங்கவின் நேர்த்தியான பந்துவீச்சு ஓய்வுக்கு பிறகும் அப்படியே இருப்பதை வெளிக்காட்டுகிறது.

மேலும், இந்தக் காணொலி மலிங்க களத்தில் சிறப்பாக செயல்பட்ட நாட்களை நினைவுபடுத்தும் வகையில் அமைந்துள்ளது. (எ)

# சிங்கப்பூரை விட பெரிய ராட்சத பனிப்பாறையின் நகர்வை "அழிவின் பாதை" என்று விஞ்ஞானிகள் கூறுவது ஏன்?

சிங்கப்பூர், பஹ்ரைன் போன்ற 29 நாடுகளைக் காட்டிலும் அதிக பரப்பளவு கொண்ட ராட்சத பனிப்பாறை அன்டார்டிகாவை விட்டு வெளியேறி கடலில் நகர்ந்து கொண்டிருக்கிறது. அந்த பாறை நகர்வது ஏன்? இப்போது எங்கே இருக்கிறது? அது நகர்ந்து செல்வதன் விளைவு என்ன?

**A23a** என அந்த பனிப்பாறை அறியப் படும் 1986இல் அண்டார்டிக்கில் இருந்து பிரிந்தது. அப்போதிருந்து மிகச் சிறிய அளவில் நகர்ந்துகொண்டிருந்த இந்தப் பனிப்பாறை, சமீபத்தில் ஒரு பெரும் இடப்பெயர்வைத் தொடங்கியுள்ளது.

முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக, நிலையான 'பனித்தீவு' போல வெட்டெல் கடலின் அடிமட்டத்தில் சிக்கியிருந்தது. சுமார் 350மீட்டர் ஆழமுள்ள அதன் அடிப்பாகம் அதை அந்த இடத்தில் நங் கூரமிட வைத்திருந்தது.

ஆனால், அந்த அடிப்பகுதி 2020ஆம் ஆண்டு வரை சிறிது சிறிதாக உருகியதன் விளைவாக, அந்த பனிப்பாறை மீண்டும் கடல்நீரில் மெல்ல மிதக்கத் தொடங்கி யது. பின்னர் காற்றோட்டம், காற்று ஆகியவை அந்தப் பனிப்பாறையை வெப் பமான காற்று மற்றும் நீர் இருக்கும் வடக்கு நோக்கி நகர வைத்தது. இப்போது அண்டார்டிகாவின் மிதக்கும் பனியில் பெருமளவைச் சுமந்து செல்லும் **A23a** தற்போது அந்தப் பாதையைப் பின்பற் றிப் பயணித்து வருகிறது.

இது அழிவின் பாதை. இன்னும் சில மாதங்களில் இந்தப் பெரும் பனிப்பாறை துண்டுதுண்டாக உடைந்து உருகப் போகி றது.

**ஈஃபிள் டவர் உயரத்தைவிட அதிக சுற்றளவு**

இன்று, அண்டார்டிக் முனையிலி ருந்து வடகிழக்கே சுமார் 700கி.மீ தொலைவில் தெற்கு ஓர்க்னி தீவுகளுக்கு அருகிலுள்ள 60வது பேரலல் என்ற பகுதியை ஒட்டிய பாதையில் நகர்ந்து செல்கிறது.

அது சிறிது சிறிதாக சிதைவதற்கான செயல்முறை ஏற்கெனவே தொடங்கி விட்டதை, செயற்கைக்கோள் படங்க ளும் அதை நெருக்கமாகக் கண்காணிக் கும் கப்பல்களில் இருந்தும் எடுக்கப் பட்ட புகைப்படங்கள் தெளிவாகக் காட் டுகின்றன. அதிலிருந்து தினமும் பெரிய ளவிலான பனித் துண்டுகள் கடலில் விழு கின்றன.

இப்போதே அப்படி உடைந்து விழுந்த கால்பந்து அளவிலான மற்றும் லாரி அளவிலான பனிக்கட்டிகள் யு23ய-ஐ சூழ்ந்துள்ளன.

காற்று, கடல்நீரோட்டம், சுழல் ஆகி யவை வரவிருக்கும் வாரங்களில் இந்த பனிப்பாறையின் போக்கைத் துல்லியமா கத் தீர்மானிக்கும். ஆனால், அதைச் சூழ்ந்திருக்கும் ராட்சத பனிப்பாறைகள், அது தற்போது இருக்கும் இடத்திலிருந்து தோராயமாக, 650கி.மீ தொலைவில் வடகிழக்கே தெற்கு ஜார்ஜியாவை கடக் கும்போதே உருகிவிடும். பிரிட்டிஷ் ஓவர்சீஸ் டெரிட்டரி என்ற பகுதி நிறைய பனிப்பாறைகள் இருக்கும் இடமாகத் தெரிகிறது.

இதன் அளவை முழுமையாகப் புரிந்து கொள்வது மிகவும் கடினம். ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையத்தின் கிரை யோசாட்-2 (துருவப் பனிக்கட்டிகளின் அடர்த்தி மற்றும் அவற்றில் நிகழும் மாற் றங்களைக் கண்காணிப்பதற்கான ஐரோப் பிய விண்வெளி ஆய்வு மையத்தின் திட் டம்) திட்டத்தில் பணியாற்றும் விஞ்ஞா னிகள் இந்தப் பெரும் பனிப்பாறையின் சுற்றளவை மதிப்பிடுவதற்கு விண்கலத் தில் ரேடார் அல்டிமீட்டரை பயன்படுத் தினர்.

அப்போது அதன் சுற்றளவு சராசரி யாக 280மீட்டர் தடிமன் இருப்பதைக் கண்டறிந்தனர். ஒப்பீட்டளவில் பார்த் தால், இது பிரான்சில் உள்ள ஈஃபில் டவரின் (330மீட்டர்) உயரத்தைவிட இதன் சுற்றளவு அதிகம்.



பிரமிக்க வைக்கும் ராட்சத அளவு

இந்த பிரமாண்ட பனிப்பாறையின் 30மீ உயரமான குன்றின் செங்குத்தான பகுதிக்கு அருகே பயணம் செய்தாலும் கூட அதன் மொத்த அளவைப் புரிந்து கொள்வது மிகக் கடினம். அப்படிச் செய் வது பக்கிங்ஹாம் அரண்மனையின் முகப் பில் நின்று லண்டனின் மொத்த பரப்ப ளவை அளவிடுவதைப் போல் இருக்கும். அதன் அளவு நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வந்தாலும், லக்சம்பர்க், பஹ் ரைன், சிங்கப்பூர் உட்பட இவற்றைப் போன்ற சுமார் 29 நாடுகளின் அளவை விட அது மிகப் பெரியது. ஆற்றல் மிக்க அலைகள் பெரும் மலையாகத் திகழும் இந்த பனிப்பாறையின் சுவர்களில் மோது கின்றன. அதன் மகத்தான் குகைகள் மற் றும் வளைவுகளைச் செதுக்குகின்றன.

அந்தப் பனிப்பாறையில் நீரில் மூழ்கி யிருக்கும் பகுதியான பரந்த சம தளத்தை, பாறையை அரிப்பதன் மூலம் மேற்புறத் திற்கு அழுத்துகின்றன. இதன் விளை வாக பனிப்பாறையின் அந்தப் பகுதிகள் இடிந்து கடலில் விழுகின்றன.



இந்தச் செயல்முறையில், கடலில் மிதந்து செல்லும் பனிப்பாறையின் சமத ளம் மேற்பரப்புக்கு அலைகளால் வலிய மேற்பரப்புக்கு வரவைக்கப்படுகின்றன. இந்தச் செயல்பாட்டில் பாறையின் மேற் பரப்பு விளிம்புகள் உடைந்து விழுகின் றன. இது மட்டுமின்றி வெப்பமான காற் றும் அதன் பங்குக்கு பனிப்பாறையைப் பாதிக்கின்றது.

**உருகும் பனியால் விழும் விரிசல்கள் ஏற்படுத்தும் அபாயம்**

காற்றிலுள்ள வெப்பத்தின் காரணமாக பனி உருகுதலால் உருவாகும் நீர், பாறை யின் மேற்பரப்பில் சேகரிக்கப்பட்டு, விரி சல்களில் வடிந்து அந்தப் பிளவுகளை இன்னும் ஆழமாகக் கீழே வரை கொண்டு செல்கிறது. இதனாலும் பாறையில் உடைப்பு ஏற்படுகிறது.


இந்த ஆண்டின் பிற்பகுதியில், இந்தப் பேரழிவுக்கான பாதையில் அதில் எஞ்சி யிருப்பது வேறு எதுவுமே இல்லை என்ற நிலை வரலாம். யு23ய பனிப்பாறை, அனைத்து பெரிய பாறைகளையும் போலவே, அது உருகும்போது அந்தப் பனியில் சிக்கியிருக்கும் கனிம தூசுக ளைச் சிதறடிக்கும்.

கடல்பரப்பில், இந்தத் தூசு கடல் உணவுச் சங்கிலிக்கான அடித்தளத்தை உருவாக்கும் உயிரினங்களுக்குத் தேவைப் படும் ஊட்டச்சத்துகளின் ஆதாரமாக உள்ளது. பிளாங்டன் முதல் பெரிய திமிங் கிலங்கள் வரை, அனைத்தும் இந்தப் பெரும் பனிப்பாறையின் அழிவிலிருந்து பயனடையும்.

இந்தப் பெரும் பனிப்பாறை குறித்து மக்கள் கேட்கும்போதெல்லாம், இதற் குக் காரணம் காலநிலை மாற்றமாகத் தான் இருக்க வேண்டும், இது வெப்பம யமாதலின் விளைவு என்று நினைக்கிறார் கள். ஆனால், உண்மை மிகவும் சிக்கலா னது.

**A23a** அண்டார்டிகாவின் ஒரு பகுதி யிலிருந்து வந்தது. அங்கு நிலைமை இன் னும் குளிராக உள்ளது. அந்த தோற்றப் புள்ளியான, ஃபில்ஷ்னர் பனிப்படலம், பனிப்பாறைகளால் உருவாக்கப்பட்ட மிதக்கும் பனிக்கட்டி ஆகும். அவை அந்த கண்டத்திலிருந்த வெட்டல் கடலுக் குள் பாய்ந்தன. அங்கு நீருக்குள் நுழை யும்போது பனிப்பாறைகளின் மிதக்கும் பரப்பு மேலே உயர்ந்து ஒன்றாக இணை கின்றன.

இந்தப் பனிப்படலத்தின் முன் விளிம் பில் பெரிய அளவிலான பனிக்கட்டிகள் உதிர்வது ஓர் இயற்கையான செயல்முறை. விஞ்ஞானிகள் இதை "கன்று ஈன்ற" எனக் குறிப்பிடுகிறார்கள். அதாவது ஒரு பசு தனது குட்டிகளைப் பெற்றெடுப்பதைப் போல, பனிப்பாறை பனிக்கட்டிகளை உதிர்க்கிறது.




பனிப்பொழிவு மற்றும் பனிப்பாறை யைப் பின்னால் இருந்து உருவாக்கும் பனிக்கட்டிகளின் வெளியேற்றம் சமநி லையில் இருந்தால் பனிப்படலம் சமநி லையில் இருக்கும். பனிப்படலத்தின் முன்புறம் வெதுவெதுப்பான நீரால் தாக் கப்பட்டால், அது சமநிலையை இழக்கக் கூடும். ஆனால், இது ஃபில்ஷ்னரில் நடப் பதற்கான ஆதாரம் எதுவும் இல்லை. ●

# இந்திய, இலங்கை இளைஞர்களை கடத்தி சைபர் அடிமையாக்கும் கும்பல்!

# உலகையே அச்சுறுத்துவது எப்படி?

சுனேத் பெரேரா
மற்றும்
இஸ்ஸாரியா ப்ரைதோங்யம்

**எச்சரிக்கை: இந்த கட்டுரையில் பாலியல் வன்முறை உட்பட பலவிதமான வன்முறைகள் பற்றிய விளக்கங்கள் உள்ளன. இது சில வாசகர்களுக்கு மன உளைச்சலை அளிக்கலாம். பங்கேற்பாளர்களில் ஒருவரான ரவியின் பெயர், அவரது அடையாளத்தைப் பாதுகாக்க மாற்றப்பட்டுள்ளது.**

“அவர்கள் என் உடைகளை கழற்றி என்னை நாற்காலியில் உட்கார வைத்து, என் காலில் மின்சாரம் பாய்ச்சினார்கள். இது என் வாழ்க்கையின் முடிவு என்று நான் நினைத்தேன்.”

ஐடி வேலையில் சேருவதற்காக ரவி, தாய்லாந்திற்குச் சென்றார். ஆனால் பாங்காக்கில் ஒரு உயரமான அலுவலக கட்டிடத்தில் உட்காருவதற்கு பதிலாக இலங்கையை சேர்ந்த இந்த 24 வயது நபர் மியான்மரில் ஒரு இருண்ட வளாகத்தில் மாட்டிக்கொண்டார்.

தாய்லாந்து எல்லை நகரமான மே சோட் அருகே அவர் கடத்தப்பட்டு ஆற்றின் குறுக்கே அழைத்து செல்லப்பட்டார்.

ஆன்லைன் மோசடிகளை நடத்தும் சீன மொழி பேசும் கும்பலின் தலைமையிலான பல முகாம்களில் ஒன்றிற்கு தான் விற்கப்பட்டதாக அவர் கூறுகிறார். ரவி போன்ற கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை நீண்ட மணிநேரங்களுக்கு இந்த மோசடிகளில் வேலை செய்யும்படி அவர்கள் கட்டாயப்படுத்துகிறார்கள். போலியான ஆன்லைன் அடையாளங்களைப் பயன்படுத்தி பெண்களாக தங்களை காட்டிக்கொண்டு அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் தனியாக இருக்கும் ஆண்களை ஏமாற்றி சிக்க வைக்கிறார்கள்.

சிக்கிக் கொண்டவர்களிடம் விரைவான லாபம் கிடைக்கும் என்று உறுதியளிக்கப்படுகிறது. போலி வர்த்தக தளத்தில் பெரிய தொகையை முதலீடு செய்ய அவர்கள் வற்புறுத்தப்படுகின்றனர்.

ரவியின் “சைபர் அடிமை” முகாம் மியாவாடியில் ஒரு காட்டில் இருந்தது. இந்தப் பகுதி மியான்மர் ராணுவ அரசின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் இல்லை.

ஆசியா, கிழக்கு ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா மற்றும் மேற்கு ஐரோப்பாவைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான இளைஞர்கள் மற்றும் பெண்கள் கணினி தொடர்பான வேலைகள் என்ற வாக்குறுதியுடன் இந்த சைபர் குற்ற முகாம்களில் வேலை செய்ய கட்டாயப்படுத்தப்படுகிறார்கள் என்று இன்டர்போல் தெரிவிக்கிறது.

கட்டளைகளை பின்பற்ற மறுப்பவர்கள் தாக்கப்படுகிறார்கள், சித்திரவதை செய்யப்படுகிறார்கள் அல்லது பாலியல் ரீதியில் துன்புறுத்தப்படுகிறார்கள்.

“அவர்களுக்கு கீழ்ப்படியாததால் நான் 16 நாட்கள் ஒரு செல்லில் பூட்டப்பட்டிருந்தேன். அவர்கள் எனக்கு தண்ணீரை மட்டுமே குடிக்க கொடுத்தார்கள். அதில் சிகரெட் துண்டுகள் மற்றும் சாம்பல் கலந்திருக்கும்,” என்று ரவி கூறினார்.

“நான் செல்லில் இருந்த ஐந்தாவது அல்லது ஆறாவது நாளில் இரண்டு பெண்கள் பக்கத்து அறைக்கு அழைத்து வரப்பட்டனர். என் கண் முன்னே 17 பேர் அவர்களை பாலியல் பலாத்காரம் செய்தனர்,” என்று அவர் கூறினார்.

“ஒரு பெண் ஃபிலிப்பைன்ஸ் நாட்டவர். பாதிக்கப்பட்ட மற்றவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்று எனக்கு உறுதியாக தெரியவில்லை.”


### கடத்தப்படுபவர்கள் யார்?

மியான்மரில் 1,20,000 க்கும் அதிகமானவர்களும், கம்போடியாவில் 1,00,000 பேரும் சட்டவிரோத சூதாட்டம் முதல் கிரிப்டோகரன்சி மோசடி வரையிலான ஆன்லைன் மோசடிகளில் வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்படுவதாக 2023 ஆகஸ்டில் ஐக்கிய நாடுகள் சபை மதிப்பிட்டுள்ளது.

லாவோஸ், ஃபிலிப்பைன்ஸ், மலேஷியா, தாய்லாந்து மற்றும் ஓரளவிற்கு வியட்நாமும் ஆன்லைன் மோசடிகளின் மையமாக இருப்பதாக சென்ற ஆண்டின் இண்டர்போல் அறிக்கை கூறுகிறது.

இந்தப் போக்கு பிராந்திய பிரச்னையிலிருந்து உலகளாவிய பாதுகாப்பு அச்சுறுத்தலாக வளர்ந்துள்ளது. பல நாடுகள் மோசடியின் மையமாக அல்லது தற்காலிக தங்கும் இடங்களாக உள்ளன என்று இண்டர்போல் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

மோசடி மையங்கள்,
பாதிக்கப்பட்டவர்களின் நாடுகள்





ஆதாரம்: இன்டர்போல் BBC

கம்போடியாவிற்கு கடத்தப்பட்ட தனது 250 குடிமக்களை இதுவரை மீட்டுள்ளதாக இந்த மாத தொடக்கத்தில் இந்திய அரசு அறிவித்தது. மார்ச் மாதத்தில் சீனா தனது நூற்றுக்கணக்கான குடிமக்களை மியான்மரில் உள்ள மோசடி மையங்களில் இருந்து திரும்ப அழைத்து வந்தது.

இந்த மையங்களை மூடுமாறு மியான்மரின் ராணுவ அரசு மற்றும் ஆயுதக் குழுக்களின் மீதான அழுத்தத்தை சீனா அதிகரித்து வருகிறது.

மியான்மரில் நான்கு வெவ்வேறு இடங்களில் சிக்கிக் கொண்டுள்ள தனது 56 குடிமக்கள் பற்றி இலங்கை அதிகாரிகள் அறிந்துள்ளனர். அவர்களில் எட்டு பேர் சமீபத்தில் மியான்மர் அதிகாரிகளின் உதவியுடன் மீட்கப்பட்டதாக மியான்மருக்கான இலங்கை தூதர் ஜனக பண்டார, தெரிவித்தார்.

புலம்பெயர தயாராக இருக்கும் பணியாளர்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பதால் முகாம்களை நடத்துபவர்கள் குறிவைப்பதற்கு வசதியாக உள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் தெற்காசியாவிலிருந்து ஆயிரக்கணக்கான பொறியாளர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் வெளிநாடுகளுக்கு வேலை தேடி இடம்பெயர்கின்றனர்.

பொருளாதார நெருக்கடியில் இருக்கும் இலங்கையை விட்டு வெளியேற கணினி வல்லுனர் ரவி ஆசைப்பட்டார். உள்ளூர் ஆட்சேர்ப்பாளர் ஒருவர் பாங்காக்கில் டேட்டா என்ட்ரி வேலைகளை வழங்குவதை அவர் அறிவித்தார்.

நிறுவனம் அவருக்கு அடிப்படை சம்பளமாக 370,000 இலங்கை ரூபாய் (1,200 டாலர்கள்) கொடுக்கும் என்று இந்த பணியமர்த்துபவர் உறுதியளித்தார்.

இந்த புதிய வேலைக்குச் சென்றால் வீடு கட்ட முடியும் என்று புதுமணத் தம்பதியான ரவியும் அவரது மனைவியும் கனவு கண்டனர். எனவே உள்ளூர் ஏஜெண்டிற்கு பணம் செலுத்த பல்வேறு இடங்களிலிருந்து அவர்கள் கடன் வாங்கினர்.

### தாய்லாந்தில் இருந்து மியான்மருக்கு கடத்தல்

2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ரவி உட்பட ஒரு இலங்கையர் குழு முதலில் பாங்காக்கிற்கும், பின்னர் மேற்கு தாய்லாந்தில் உள்ள மே சோட் நகரத்திற்கும் அனுப்பப்பட்டனர்.

“நாங்கள் ஒரு ஹோட்டலுக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். ஆனால் விரைவில் இரண்டு துப்பாக்கி ஏந்தியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டோம். அவர்கள் எங்களை ஒரு ஆற்றை கடக்க வைத்து மியான்மருக்கு அழைத்துச் சென்றனர்” என்று ரவி கூறினார்.

பின்னர் அவர்கள் சீன மொழி பேசும் கேங்ஸ்டர்களால் நடத்தப்படும் முகாமுக்கு மாற்றப்பட்டனர். புகைப்படம் எடுக்கக் கூடாது என்று மிரட்டப்பட்டனர்.

“நாங்கள் பயந்து போனோம். இலங்கை, பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஷ் மற்றும் ஆப்பிரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்கள் உட்பட சுமார் நாற்பது இளைஞர்கள் மற்றும் இளம் பெண்கள் முகாமில் வலுக்கட்டாயமாக தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்” என்றார் அவர்.

உயரமான சுவர்கள் மற்றும் முள் கம்பிகள் காரணமாக இந்த வளாகங்களில் இருந்து தப்பிப்பது கடினம் என்று ரவி கூறினார். மேலும் நுழைவாயில்களை துப்பாக்கி ஏந்தியவர்கள் எந்த நேரமும் காவல் காக்கின்றனர் என்று அவர் குறிப்பிட்டார்.

தானும் மற்றவர்களும் ஒரு நாளைக்கு 22 மணிநேரம் வரை வேலை செய்ய வேண்டியிருந்தது என்றும் ஒவ்வொரு மாதமும் ஒரு நாள் மட்டுமே விடுமுறை கிடைத்தது என்றும் ரவி கூறினார். ஒவ்வொரு நாளும் அவர்கள் குறைந்தது மூன்று நபர்களை குறிவைக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

கீழ்ப்படியாதவர்கள் பணம் கொடுத்து விட்டு வெளியேறும்வரை அடி மற்றும் சித்ரவதைகளை எதிர்கொண்டனர்.

அப்படிச்செய்த ஒருவர், மேற்கு இந்தியாவில் மகாராஷ்டிராவைச் சேர்ந்த நீல் விஜய். 21 வயதான அவர் 2022 ஆகஸ்டில் ஐந்து இந்திய ஆண்கள் மற்றும் இரண்டு ஃபிலிப்பைன்ஸ் பெண்களுடன் மியான்மருக்கு கடத்தப்பட்டார்.

தனது தாயின் பால்ய நண்பர் பாங்காக்கில் உள்ள ஒரு கால் சென்டரில் தனக்கு வேலை வாங்கித் தருவதாக உறுதியளித்ததாகவும், ஏஜெண்ட் கட்டணமாக 1,50,000 இந்திய ரூபாய் (1,800 டாலர்கள்) வசூலித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

“சீன மொழி பேசுபவர்களால் நடத்தப்படும் பல நிறுவனங்கள் இருந்தன. அவை அனைத்துமே மோசடி நிறுவனங்கள். நாங்கள் அந்த நிறுவனங்களுக்கு விற்கப்பட்டோம்,” என்று நீல் கூறினார்.

“நாங்கள் அந்த இடத்தை அடைந்தபோது, நான் நம்பிக்கை இழந்தேன். என்னுடைய அம்மா அவர்களுக்கு பிணைத்தொகையை தந்திருக்கவில்லை என்றால் மற்றவர்களைப் போல நானும் சித்ரவதை செய்யப்பட்டிருப்பேன்,” என்றார் அவர்.

இந்த மோசடி வேலையில் நீல் ஈடுபட மறுத்ததால் அவரை விடுவிக்க நீலின் குடும்பம் அந்த கும்பலுக்கு 6,00,000 இந்திய ரூபாய்களை (7,190 டாலர்கள்) கொடுத்தது. ஆனால் இலக்கை அடையத் தவறியவர்களுக்கு மற்றும் பிணைத்தொகை கொடுக்க முடியாதவர்களுக்கு அளிக்கப்பட்ட கொடூரமான தண்டனைகளை அவர் தனது கண்களால் கண்டார்.

அவர் விடுவிக்கப்பட்டதை தொடர்ந்து தாய்லாந்து அதிகாரிகள் அவர் இந்தியா திரும்புவதற்கு உதவினார்கள். அங்கு அவரது குடும்பத்தினர் உள்ளூர் பணியமர்த்துபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்துள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களை அவரவர் சொந்த நாட்டிற்கு அனுப்பி வைக்க தாய்லாந்து அதிகாரிகள் மற்ற நாடுகளுடன் இணைந்து பணியாற்றி வருகின்றனர். இருப்பினும் அண்டை நாடுகளில் செயல்படும் முகாம்களில் வலுக்கட்டாயமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில், மீட்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு என்று தாய்லாந்து நீதித்துறை அமைச்சகத்தின் மூத்த அதிகாரி தெரிவித்தார்.

“உலகத்துடன் தொடர்பு கொள்வதில் நாங்கள் அதிகம் பணியாற்ற வேண்டும். மக்கள் தங்களை தற்காத்துக் கொள்ளும் விதமாக இந்த குற்ற கும்பல்களைப் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்,” என்று தாய்லாந்தின் சிறப்பு புலனாய்வுத் துறையின் (டிஎஸ்ஐ) துணை இயக்குநர் ஜெனரல் பியா ரக்சகுல் கூறினார்.

(16ம் பக்கம் பார்க்க)

# இந்திய, இலங்கை இளைஞர்களை கடத்தி...

(15ம் பக்கம் பார்க்க)

இந்தியா மற்றும் இலங்கை உட்பட பல நாடுகளைச் சேர்ந்தவர்கள் 'வருகை விசா' வுடன் தாய்லாந்திற்குள் நுழைய முடியும். எனவே மனித கடத்தல்காரர்கள் பெரும்பாலும் பிராந்தியத்திற்குள் ஒரு பயண மையமாக பாங்காக்கை பயன்படுத்துகின்றனர் என்று அவர் கூறுகிறார். "குற்றவாளிகள் இதை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு தங்களுக்காக வேலை செய்ய மக்களை கடத்திக்கொண்டு செல்கிறார்கள்," என்று அவர் கூறினார்.

**மோசடி எவ்வாறு நடக்கிறது?**

பணக்காரர்களை குறிப்பாக மேற்கத்திய நாடுகளில் உள்ளவர்களை குறிவைக்க தான் கட்டாயப்படுத்தப்பட்டதாக ரவி குறிப்பிட்டார். திருடப்பட்ட தொலைபேசி எண்கள், சமூக ஊடகங்கள் மற்றும் செய்தியிடல் தளங்களைப் பயன்படுத்தி காதல் உறவுகளை உருவாக்குவதன் மூலம் இந்த மோசடி நடப்பதாக அவர் சொன்னார்.

அவர்கள் குறிவைக்கப்பட்டவர்களை நேரடியாக தொடர்புகொண்டனர். பொதுவாக முதல் செய்தி ஒரு எளிய "ஹாய்" என்பதாக இருக்கும். அது தவறாக அனுப்பப்பட்டதாக முதலில் நம்பவைக்கப்படும். சிலர் இந்த செய்திகளை புறக்கணித்துவிடுவார்கள். ஆனால் தனிமையில் இருப்பவர்கள் அல்லது செக்ஸ் தேடுபவர்கள் பெரும்பாலும் இதில் சிக்கிக் கொள்வார்கள் என்று ரவி கூறுகிறார்.


இலக்கு வைக்கப்பட்டவர்கள் இதில் சிக்கியதும் அவர்களை மேலும் கவர்ந்திழுக்க, முகாமில் இருக்கும் இளம் பெண்களை கட்டாயப்படுத்தி எடுக்கப்பட்ட ஆபாச படங்கள் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

ஒரு சில நாட்களுக்குள் நூற்றுக்கணக்கான செய்திகளை பரிமாறிக் கொண்ட பிறகு மோசடி செய்பவர்கள் இந்த நபர்களின் நம்பிக்கையைப் பெறுவார்கள். போலி ஆன்லைன் வர்த்தக தளத்தில் பெரிய தொகையை முதலீடு செய்வதற்கு அவர்களை நம்ப வைப்பார்கள்.

போலி செயலிகள், தவறான முதலீடு மற்றும் லாபத் தகவல்களைக் காட்டும்.

"யாராவது 100,000 டாலர்கள் அனுப்பி வைத்தால் அது அவர்களின் லாபம் என்று கூறி 50,000 டாலர்கள் திருப்பி அனுப்பி வைப்போம். இப்போது தங்களிடம் 1,50,000 டாலர்கள் இருக்கிறது என்ற எண்ணத்தை இது ஏற்படுத்துகிறது. ஆனால் உண்மையில் அவர்கள் ஆரம்பத்தில் அளித்த தொகையின் பாதியை மட்டுமே திரும்பப் பெறுகிறார்கள். இன்னொரு பாதி எங்களிடம் இருக்கும்," என்று ரவி விளக்கினார்.

தென்கிழக்கு ஆசியாவில் இணையவழி மோசடி மையங்கள்




ஆதாரம்: இன்டர்போல் BBC

மோசடி செய்பவர்கள், பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து தங்களால் இயன்ற அளவு பணத்தை எடுத்த பிறகு செய்தியிடல் கணக்குகள் மற்றும் சமூக ஊடக சுயவிவரங்கள் மறைந்துவிடும்.

இந்த செயல்பாட்டின் அளவை மதிப்பிடுவது கடினம். ஆனால் அமெரிக்காவில் நம்பிக்கை அல்லது காதல் மோசடிகள் தொடர்பாக 17,000 க்கும் மேற்பட்ட புகார்கள் இருப்பதாகவும், மொத்த இழப்பு 652 மில்லியன் டாலர்கள் என்றும் எவ்டிஐ தனது 2023 இன் இணைய குற்ற அறிக்கையில் கண்டறிந்துள்ளது.

**உளவியல் மற்றும் உடல் காயங்கள்**

ஒரு மாத சிறைக்குப் பிறகு ரவி, தான் முதலில் பணிபுரிந்த "கம்பெனி" திவாலானதால் வேறொரு கும்பலுக்கு விற்கப்பட்டதாகக் கூறுகிறார். அவர் மியான்மரில் சிக்கியிருந்த ஆறு மாதங்களில் மூன்று வெவ்வேறு கும்பல்களிடம் அவர் ஒப்படைக்கப்பட்டார்.

தன்னால் இனி யாரையும் ஏமாற்ற முடியாது என்றும் தன்னை இலங்கை திரும்ப அனுமதிக்க வேண்டும் என்றும் அவர் தனது புதிய கேங்க் மாஸ்டர்களிடம் கேட்டுக் கொண்டார்.

ஒரு நாள் டீம் லீடருடன் ஏற்பட்ட மோதல் சண்டைக்கு வழிவகுத்தது. ரவி ஒரு அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டு 16 நாட்கள் சித்ரவதை செய்யப்பட்டார்.

கடைசியாக, "சீன முதலாளி" ரவியை சந்திக்க வந்து, அவருக்கு மீண்டும் வேலை செய்ய "கடைசி வாய்ப்பு" கொடுத்தார். கணினி மென்பொருளில் அவருக்கு இருந்த நிபுணத்துவம் காரணமாக இந்த வாய்ப்பு அவருக்கு அளிக்கப்பட்டது.

"எனக்கு வேறு வழி இருக்கவில்லை. அதற்குள் எனது பாதி உடல் செயலிழந்துவிட்டது," என்று ரவி குறிப்பிட்டார்.

அடுத்த நான்கு மாதங்களுக்கு, ஏஐ, செயற்கை நுண்ணறிவு செயலிகள் மற்றும் 3டி வீடியோ கேமராக்களைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட பேஸ்புக் கணக்குகளை ரவி நிர்வகித்தார்.

இதற்கிடையில், நோய்வாய்ப்பட்ட தனது தாயை சந்திக்க இலங்கை செல்ல அனுமதி கேட்டார் ரவி.

6,00,000 இலங்கை ரூபாய் (2,000 டாலர்கள்) மற்றும் ஆற்றைக் கடந்து தாய்லாந்திற்குள் செல்ல கூடுதலாக 200,000 ரூபாய் (650 டாலர்கள்) செலுத்தினால் அவரை விடுவிக்க கும்பல் தலைவர் ஒப்புக்கொண்டார்.

ரவியின் பெற்றோர் வீட்டை அடமானமாக வைத்து கடன் வாங்கி அவருக்கு அனுப்பி வைத்தனர். ரவி மீண்டும் மே சோட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

விசா இல்லாததற்காக விமான நிலையத்தில் அவருக்கு 20,000 தாய் பாத் (550 டாலர்) அபராதம் விதிக்கப்பட்டபோது ரவியின் பெற்றோர் மேலும் கடன் வாங்க வேண்டியிருந்தது.

"நான் இலங்கைக்கு வந்தபோது, என்னிடம் 18,50,000 ரூபாய் (6,100 டாலர்கள்) கடன் இருந்தது," என்று அவர் கூறினார்.

அவர் இப்போது வீடு திரும்பிவிட்டார், ஆனாலும் தனது புது மனைவியைப் பார்க்க ரவிக்கு நேரமில்லை.

"இந்த கடனை அடைக்க இரவு பகலாக கேரேஜில் உழைக்கிறேன். எங்கள் இருவருடைய திருமண மோதிரங்களையும் அடமானம் வைத்துள்ளோம்" என்று மனக்கசப்புடன் அவர் கூறினார்.

(பிபிசி)

